Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

(Yuddha Sanchikai)

மலர் IV 1943-ம் ஆண்டு அக்டோபர் மீ 29உ, வெள்ளிக்கிழமை இதழ் 9

விடுதலை வாழ்விற்காகப் போராட்டம்

ஜெனரல் அய்சினேவர்.

" இந்த யுத்தம் மகா கடுமையானது ; பெரிதும் அருவருக்கத் தக்கது ; ரத்தக் களறியானது. இதில் வெற்றி பெற நெடு நாட்கள் செல்லும்: கடைசி வரை தொடர்ந்து, கவனத்தோடு போராடத் தான் வேண்டும்.

இது நம் படையினருக்குத் தெரியும். இதற்கு அவர்கள் ஆயத்தமாகத் தான் இருக்கிறார்கள். ஆனால் தம் சொந்த ஊர்களிலுள்ளவர்கள் தமக்கு ஆதரவாயிருக்க வேண்டு மென்பது பற்றி, அவர்கள் மிகவும் ஆவலா யிருக்கிறார்கள். தாம் இப் போராட்டத்தில் சேர்ந்து போராடுவது, தம் விடுதலை வாழ்வை முன்னிட்டுத் தான் என்று தம் சொந்த ஊர்களில் உள்ளவர்கள் உண்மையிலேயே உணருகிறார்களா வென்று அவர்கள் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள் "

ஜெனரல் அய்சினேவர், ஆல்ஜியர்ஸ் வானொலிப் பிரசங்கத்தில்
அக்டோபர் மாதம் 24-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம்: ஜெனரல் அயிசின்ஹோவர் ..	1	படைகளுக்கு இளைப்பாறும் விடுதி	6
"விடுதலை வாழ்விற்காகப் போராட்டம்" ..	1	இந்தியப் பெண்கள் உதவிப் படை ..	7
முரசொலி	2	வீர ருஷ்யர்கள்	9
தலையங்கம்: ரஷ்யர் வெற்றி வாகை ..	3	வெட்கம்! வெட்கம்!	10
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4	இராணுவ மோட்டாரோட்டிகளுக்குக் கட்டு திட்டங்களில்லையா? :	10
உணவுப் பொருள் சேமிப்பும் கொள்ளை லாபமும்	5	யுத்தநாட் குறிப்புக்கள்	11
யுத்தகாலத்தில் அரசாங்க உதவி	6	பரிசுகள்	12

முரசொலி

"பிரிட்டனின் முக்கியமான படைகளும், அமெரிக்காவின் முக்கியமான படைகளும், ஜெர்மன் படைகளோடு இன்னும் போராட வேண்டியிருக்கிறது. பெரும் முயற்சி செய்து, பிரிட்டனும் அமெரிக்காவும் பெரும் படைகளைத் திரட்டி யிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய தளவாடங்கள் முதலிய அனைத்தும் அங்கே கொடுக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. நேச நாடுகளின் கட்டளைப்படி தான் இந்த இரண்டு நாடுகளின் படைகளும் போர் முனையில் இறங்கும். போராட்டத்தில் இப்போது இறங்குவதனால், இந்த இரு நாடுகளும் இந்த யுத்தத்தை விரைவில் முடித்து விடக் கூடும்."

—"தொழிலும் தொழிலாளரும்" என்னும் சோவியத் பத்திரிகையின் தலையங்கத்தின் ஒரு பகுதி.

* * * * * *

"ஒரு விநாடி கூட இந்தியா தளர்வடைய முடியாது. நேச நாடுகளுங் கூடத் தான். நம் நாட்டில் விலைவாசிகள் உயர்ந்து விட்டது, ஒரு பெரும் பிரச்சினையா யிருக்கிறது. இதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிப்பதில் நம் கவனத்தைச் செலுத்தி, மிகவும் சிறந்த முறையில் பிறருக்கு நாம் உதவி செய்யலாம். இந்தப் பிரச்சினைக்கு யுத்தம் ஒரு காரணம். பல வகை சமுதாயத் தொல்லைகளுக்கும் எவை மூல காரணங்களோ, அவையும் இந்தப் பிரச்சினைக்குக் காரணங்களாம். இதற்கு, மிச்சப்படுத்தி வைப்பது மட்டுந் தான் ஏற்ற பரிகாரம்.

—சர் சுல்தான் அகமத் மத்திய அரசாங்க சபையங்கத்தினர் கூறியது.

* * * * * *

"இந்த வாழ் நாளில் நாம் எதைப் பற்றியாவது உறுதியாகக் கூறக் கூடு மென்றால், அது தான் நாம் வெற்றி யடைவோம் என்பது. இதற்கு ஒரு விஷயம் மிகவும் அவசியம். அதாவது தொழிலாளர்கள் அனைவரும் படையினர் அனைவரும், தம் முழு பலத்தையுங் கொண்டு, தம் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்."

— ஜெனரல் மண்காமரி, எல் அலமீன் வெற்றி ஆண்டு விழாவின் போது ஒலி பெருக்கிய பிரசங்கத்தில் குறிப்பிட்டது.

* * * * * *

தமிழ்ப் பெருமக்களே!

"விடுதலை"

உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா: (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா: ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV   1943-ம் ஞு அக்டோபர்மீ 29உ, வெள்ளிக்கிழமை   இதழ் 9

ரஷ்யர் வெற்றி வாகை

சென்ற வாரம் ரஷ்யாவில் நடை பெற்ற போரில் இரண்டு தலை சிறந்த வெற்றிகள் செம்படைகளுக்குக் கிடைத்திருக்கின்றன. டினீப்பர் ஆற்று வளைவுக்கு வடக்கே இரண்டு இடங்களில் ஆற்றில் உடைப்புக்கள் ஏற்பட்டு விட்டன. இது ரஷ்யப் போராட்டத்தின் மிகவும் முக்கியமான தோர் அம்சம். இந்த வளைவு மிகவும் முக்கியமானது. இதை யடுத்துத் தான் நிலக்கரிச் சுரங்கங்களும், இரும்புச் சுரங்கங்களும் இருக்கின்றன. க்ரிமியாவிற்கும் ஒடெஸாவிற்கும் இங்கிருந்து போக வழி யுண்டு. இந்த இரண்டு இடங்களையும் ரஷ்யர்கள், கைப்பற்றிக் கொண்டால், பால்கன் நாடுகளுக்குக் குளிர் விட்டது போலத் தான். ஹிட்லருக்கிருந்த பெருமை, அங்கே வெகுவாகச் சிதைந்து கொண்டு வருகிறது. இனி அது கலகலத்து விடும் என்பது உறுதி. ஆகவே தான், இந்த வளைவிற்குக் கீழ்திசையிலுள்ள ரயில்வே லைனைப் பாதுகாக்க, ஜெர்மானியர்கள் மிகவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ரயில்வே, சப்ரேஷேயிலிருந்து மெலிடொபோல் வழியாகக் கிரிமியாவிற்குப் போகிறது. மெலிடொபோலில் மகா கடுமையாக ஜெர்மானியர்கள் போராடினார்கள். என்றாலும் கடைசியில் தோற்று விட்டார்கள். இங்கு நடந்த போராட்டத்தை ஸ்டாலின் கிராட் போராட்டத்திற்கு ஒப்பிட்டுக் கூறலாம். தெருத் தோறும் வீடு தோறும் மாறி மாறி இருதரத்தாரும் போராடினார்கள். இங்கு போராடிய படையினர் மிகச் சிறந்தவர்கள். இந்தப் போராட்டம் 11 நாட்கள் இரவுப் பகல் இடை விடாது நடை பெற்றது. கடைசியாக மெலிடொபோல் பிடிபட்ட பிறகு, ரயில் வழியாகக் கிரிமியாவிற்குப் போவதற்கு வழியைச் சுத்தப் படுத்தினார்கள் ரஷ்யர்கள். இரண்டாவதாக நொகைப்பஸ்கி என்னும் சதுப்பு நிலத்தின் வழியாக டினீப்பர் ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள கெர்ஸான் என்னுமிடத்திற்குப் போகும் பாதையையும் செப்பனிட்டார்கள். கிரிமியாவிலிருந்து ஜெர்மானியர்கள் தப்பி யோடுவதற்கு, கெர்ஸான், புழைக் கடை வாயில் போன்றது. பெரிகோப் பூசந்திக்கும் இதற்கும் ஒரு ரயில்வேயை ஜெர்மானியர்கள் போட்டு வைத்திருக்கிறார்கள்.

மெலிடொபோலையும் இயபையும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, ஜெர்மானியர்கள் அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கும் போது, டினீப்பர் ஆற்றின் வளைவிற்கு வடக்கே ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் தாக்கி வந்து வளைத்துக் கொண்டார்கள். இதிலிருந்து ஒரு விஷயம் வெள்ளையாகத் தெரிகிறது. டினீப்பர் ஆற்றிற் கருகிலுள்ள போர் முனையில் தம் இடங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியாத நிலைமையில் ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

டினீப்பர் ஆற்றின் வளைவில் தான் டினீப்ரோபெட்ரோப்ஸ்க் நகரம் இருக்கிறது. இது உக்ரேன் மாகாணத்திலே ஒரு முக்கியமான நகரம். இதையும் இப்போது செஞ்சேனைகள் கைப்பற்றி விட்டன. க்ரிவாய் ராக் இதை யடுத்துள்ள ஒரு சுரங்கப் பகுதி. இங்கே ஒரு ரயில்வே ஜங்ஷன் இருக்கிறது. இதை இப்போது செஞ்சேனைகள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இடத்தைப் பிடித்து விட்டால், ஜெர்மானியர்கள் கீழ் பகுதிக்கு வர முடியாமற் தடுத்து விடலாம். பொதுவாக தென் கோடியிலுள்ள நாஜிப் படைகள் பேராபத்திற்கு உள்ளாகி யிருக்கின்றன. அடுத்த வாரத்தில் இந்தப் போராட்டத்தின் பலா பலன் ஒருவாறு தெரிய வரலாம்.

நிற்க, நாஜிகளின் ‘பாதர்லந்து லைனை’ப் பாதுகாப்பது கோமெல். இங்கே பல வாரங்களாக ஜெர்மன் படைகளுக்கும் சோவியத் படைகளுக்கும் கடும் போர் நடந்து கொண்டு வருகிறது.

இத்தாலியில் நாஜிப் படைகளுக்கு வசதிகள் அதிகமாயிருந்தும், தோல்விகள் அடைந்து வருகிறார்கள். இத்தாலி குறுகி நீண்ட தோர் தீபகற்பம். அதன் நடுவில் நீண்ட மலையிருக்கிறது. இதில் பல பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. இந்த மலைகளிலிருந்து தற்காப்புப் போராடுவது எளிது ; தாக்கிப் போராடுவது கஷ்டம். என்றாலும், நேச நாட்டுப் படைகள் தம் கஷ்ட நஷ்டங்களைப பாராட்டாமல், முன்னேறிக் கொண்டிருக்கின்றன. பல புதிய ஊர்களைக் கைப்பற்றி வருகின்றன. வால்டர்னோ ஆற்றின் வட கரையில் இறுமாப் போடிருந்த கெசல்ரிங்கின் படைகளை அமெரிக்கப் படைகள் மலைகளுக்கு ஓடிப் போகும்படி விரட்டி விட்டன. எட்டாம் படை விஞ்சியாடுரோ வென்னுமிடத்தைக் கைப்பற்றி விட்டது. இது அப்பினைன் மலையிலுள்ள ஒரு மத்திய ஸ்தானம். இங்கிருந்து ரோமாபுரிக்கு ஒரு பாதை போகிறது. மேற்கேயுள்ள வால்டர்னோ அணைக்கு மற்றொரு பாதை போகிறது. வால்டர்னோ ஆற்றின் வட பகுதிக்கு ஜெனரல் கெய்சல்ரிங் தன் படைகளுடன் பின் வாங்கிக் கொண்டிருக்கிறார். வால்டர்னோ ஆற்றின் இரு கரைகளிலும் உயர்ந்த மலைகளிருப்பதனால், இந்த இடத்தை இலகுவில் தாக்க முடியாது என்பது ஜெனரல் கெய்சல்ரிங்கின் எண்ணம்.

கரை யோரத்திலுள்ள சதுப்பு நிலங்களின் வழியாக, பிரிட்டிஷ் படைகள் கடந்து வருகின்றன. அமெரிக்கப் படைகளோ குறுகிய வால்டர்னோ பள்ளத் தாக்குகளினூடே முன்னேறிப் போய்க் கொண்டிருக்கின்றன.

அப்பினைன் மலைக்குக் கிழக்கே, ஜெனரல் மண்காமரி விஞ்சியாடுரோவை யடுத்துள்ள மலைப் பிரதேசத்தைச் சுத்தம் செய்து கொண்டு, இசெர்னியா பள்ளத் தாக்கு

வழியாக முன்னேறுவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார். இங்கே, ஜெனரல் கெய்சல்ரிங்கின் இடது புறப் படைகளைத் திண்டாடும்படி செய்வாரென்று தெரிகிறது. பரெனெல்லோவை அவர் கைப்பற்றியதனால், மேற்கொண்டு அவர் போவதற்கு வழி விட்டது போலாகி விட்டது. என்றாலும் கடுமையாக எதிரிகள் வழியில் எதிர்க்கத் தான் செய்வார்கள்.

ஜெனரல் மெக்கார்தர் தன் படைகளை இரண்டு வகைகயில் செலுத்திக் கொண்டு மாடாங்கைக் கைப்பற்ற முயற்சிக்கிறார். ஒன்று ஆற்றை ஒட்டிய பள்ளத் தாக்கு. மற்றொன்று கடற்கரை. இந்த இடத்தில் ஜப்பானியர்கள் மகா கடுமையாகப் போராடுகிறார்கள். பினஸ்சேபன் என்னுமிடத்தில் ஜப்பானியர்கள் ஓரளவிற்கு வெற்றி பெற்றார்கள். என்றாலும் இது நிரந்தரமான வெற்றியாகாது. நேச தேசப் படைகளுக்கு ஆற்றாது, பல விடங்களிலும் ஜப்பானியப் படைகள் ஓட்ட மெடுக்கின்றன.

நிற்க, தென் கிழக்குப் படைத் தலைவரான மேன்மை தங்கிய லார்ட் லூயி மௌண்ட்பாட்டன் இந்தியா திரும்பி விட்டார். விரைவில் பர்மாவைக் கைப்பற்றும் முயற்சிகள் செய்யப்படும்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ரஷ்யாவின் வளங்கள் : ஜெர்மனியின் பேராசை.

நேர் முகமாகவோ விமான பலத்தைக் கொண்டோ பிரிட்டனை வெல்ல முடியாதென்று 1941-ம் வருஷத்திலேயே ஜெர்மனி உணர்ந்து விட்டது. அப்போது தம் "நீர்மூழ்கிக் கப்பல்களாலும், உக்ரேன் மாகாணத்தாலுந் தான்" வெற்றி கிடைக்கு மென்று முழங்கிக் கொண்டிருந்தது. பிரிட்டனுக்குப் போகவர இருக்கும் கப்பல்களைத் தம் நீர் மூழ்கிக் கப்பல்கள் நாசஞ் செய்து விடு மென்றும், உக்ரேனிலுள்ள விளை பொருள்களைக் கொண்டு நேச நாட்டினரைப் பயமுறுத்தலா மென்றும் ஜெர்மனி மனப் பால் குடித்துக் கொண்டிருந்தது.

1938-ம் வருஷத்தில் ஹிட்லர் இது பற்றி குறிப்பிட்டதாவது :—

"ஊரல், சைபீரியா, உக்ரேன் முதலிய பகுதிகள் மட்டும் எனக்குக் கிடைத்திருந்தால், அபரிமிதமான இன்ப வாழ்வில் 'நாஷனல் சோஷியாலிஸ்ட்' ஜெர்மனி ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும்."

ஜெர்மனி பிரசார மந்திரியான டாக்டர் கொப்பல்ஸ் 'டாஸ் ரெய்ச்' என்னும் பத்திரிகையில், 1941-ம் வருஷம் ஒரு கட்டுரையில் கீழ்க் கண்டவாறு எழுதியிருக்கிறார் :—

"ஏராளமான பொருளாதார முன்னேற்ற மடைவதற்கு, கிழக்கே யுள்ள பெரும் வெளிகள் மிகவும் இடங் கொடுக்கின்றன. நமக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க ஒட்டாதபடி பிரிட்டிஷார் போட்டிருக்கும் தடைகள் இதனால் தளர்வடையலாம்."

இந்தத் தடைகள் இன்னும் இருக்கத் தான் செய்கின்றன. இதனால் ஜெர்மன் பொருளாதார நிலை மெதுவாக, ஆனால் கண்டிப்பாகப் பாதிக்கப்படுகின்றன. உக்ரேனில் ஏராளமாகக் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கைப்பற்றக் கூடவில்லை. ரஷ்யாவிலேயே மிகப் பரந்ததும், வளங்களில் சிறந்ததுமான, தனிப்பட்ட தொழிற் சாலைகள் மிகுந்த பிரதேசம் டன்பாஸ். இது மீண்டும் ரஷ்யர்கள் கைக்கு வந்து விட்டது. உக்ரேனின் கீழ் பகுதி மீட்கப்பட்டு விட்டது. மேற்குப் பகுதி ரஷ்யர்கள் முன்னேற்றத்தினால் நாசமாகிவிட்டது.

டானெட்ஸ் பேசின் பகுதி ஜெர்மானியர்களின் வசப்பட்டிருக்கும் போது, அதிலிருந்து ஏராளமான நன்மைகளை ஜெர்மானியர்கள் அடைந்திருப்பார்களா என்பது சந்தேகந் தான். பொருளாதாரப் போராட்ட மந்திரி காரியாலயத்திலிருந்து கிடைத்த புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தால், கீழ்க் கண்ட விவரங்கள் வெளியாகின்றன :—

யுத்தத்திற்கு முன்பு நிலக்கரி ஏறக்குறைய 9 கோடி டன் விளைந்து கொண்டிருந்தது ; இது ரஷ்யாவில் உற்பத்தியாகும் மொத்த நிலக்கரியில் 100-க்கு 60·8 பங்கு ஆகும். ஆனால் ரஷ்யர்கள் இந்தப் பகுதியை விட்டுக் காலி செய்து போகும் போது, நிலக்கரிச் சுரங்க இயந்திரங்களையெல்லாம் அடியோடு நாசஞ் செய்து விட்டுப் போய்விட்டார்கள். ஆகவே, முன்பு கிடைத்ததில் 10 ல் ஒரு பங்காவது ஜெர்மானியர்களுக்குக் கிடைத்திருக்குமா வென்பது சந்தேகந் தான். அப்படியே கிடைத்திருந்தாலும், அதை ஜெர்மானிய இயந்திரங்களை ஓட்டுவதற்கு அனுப்பியிருக்க முடியாது. ஏனென்றால், கீழ் நாடுகளில் ஜெர்மானியர்கள் கைப்பற்றியுள்ள பகுதிகளின் உபயோகத்திற்கு மட்டுந் தான் இது பயன்படும்.

இப்போது டானெட்ஸ், பேசின் பகுதி ரஷ்யர்கள் வசமாகி விட்டது. டன்பாஸ் நிலக்கரிச் சுரங்கங்களில் இப்போது ரஷ்யர்கள் நிலக்கரி எடுக்கலாம். பெரிய பெரிய தொழிற் சாலைகள் கார்கோப்பில் இருக்கின்றன. இங்கே தான் பெரிய இயந்திர ஏர்களும், விவசாய இயந்திரங்களும் செய்யப்படுகின்றன. ஸ்டாலினோவில் தண்டவாள உற்பத்தி மிகவும் அதிகம். டினீப்பர் ஆற்றங் கரையிலுள்ள செப்பொரொஷே என்னுமிடத்தில் தளவாடங்களுக்கு உபயோகிக்கப்படும் விசேஷ எஃகு தயாரிக்கப்படுகிறது. டினிப்ரோட்செர்ஷின்ஸ்க், டினிப்ரோபெட்ரோப்ஸ்க் என்னு மிடங்களில் பெருவாரியாக உலோக வேலைகள் நடைபெறுகின்றன. டினிப்ரோட்செர்ஷிங்கைக், கைப்பற்றத் தக்க நிலைமையில் செம்படைகள் இருக்கின்றன. டினிப்ரோபெட்ரோப்ஸ்கைக் கைப்பற்றிவிட்டன.

உக்ரேன் கோதுமை வயல்களைக் கொள்ளை கொள்ளலா மென்று பேராசை கொண்டிருந்த ஜெர்மானியர்கள் மிகுந்த ஏமாற்றத்திற்கு ஆளானார்கள். உக்ரேன் பகுதியில் கைத் தொழில்களை விருத்தி செய்ய ரஷ்யர்கள் முயற்சித்ததிலிருந்து தேவைக்கேற்ற அளவு மட்டுந் தான் தானியங்களைப் பயிர் செய்தார்கள்.

உக்ரேன் விவசாயம் : சாகுபடியில் குறைவு.

யுத்தத்திற்கு முன்பு உக்ரேனில் 1 லட்சம் டன் எண்ணெய் தரக்கூடிய தாவரங்கள் பயிராயின. ஜெர்மானியர்கள் பயிர் செய்ததிலிருந்து 30 ஆயிரம் டன்னுக்கு அதிகமாக அவர்களால் எடுக்க முடியவில்லை. தமக்கு பருத்தி ஏராளமாகக் கிடைக்கு மென்று ஜெர்மானியர்கள் எதிர் பார்த்தார்கள். ரஷ்யர்கள் 36,000 டன் பருத்தி எடுக்கக் கூடிய இடத்தில், ஜெர்மானியர்கள் 17 ஆயிரம் டன் பருத்தி மட்டுந் தான் எடுக்க முடிந்தது. 1939-ம் வருஷத்தில் ரஷ்யர்கள் 30 ஆயிரம் டன் சணல் எடுத்தார்கள். ஆனால் ஜெர்மானியர்கள் கொஞ்சங் கூட எடுக்க முடியவில்லை. விவசாயப் பொருள்கள் கிடைக்காமல் ஜெர்மானியர்கள் ஏமாந்ததற்கு 3 காரணங்கள் கூறப்படுகின்றன.

(1) பெரிய இயந்திர ஏர்கள் கிடையாது. (2) விவசாயத் தொழிலாளிகள் இல்லை. (3) எருக்களுக்குப் பஞ்சமாகி விட்டது. எருப் பஞ்சத்திற்குக் காரணம், பிரிட்டிஷார் விதித்த தடைகள் தான். உண்மையில் உக்ரேனில் நாஜிகளுக்குக் கிடைத்தவை எல்லாம், அங்கிருந்த ஜெர்மன் படைகளுக்கு மட்டுந்தான் போதுமானவையா யிருந்தன. இந்தக் கஷ்டங்கள் தமக்கிருப்பதாக டாக்டர் கொப்பல்ஸ் 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ம் தேதி ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் கூறியதாவது :—

"கிழக்குப் பகுதிகளில் மூலப் பொருட்கள் மிகவும் அதிகம். பூமியும் வளமானது. ஐரோப்பிய நாடுகளின் மூலப் பொருட்களோடு இவையும் சேர்ந்தால், வாழ்க்கைக்கு, வற்றாத அமுதசுரபியாக நமது கண்டம் விளங்கும். இதற்கு ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய பலம் இதுவரை நமக்கில்லை."

(6-ம் பக்கம் பார்க்க.)

உணவுப் பொருள் சேமிப்பும் கொள்ளை லாபமும்

திருச்சினுப்பள்ளி அகில இந்தியா வானொலி நிலையத்தில், தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூர் வடபாதிமங்கலம் ஜமீன்தார் ராவ் பகதூர் வி. எஸ். தியாகராஜ முதலியாரவர்கள், எம்.எ., அக்டோபர் மாதம் 7-ம் தேதி உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்காமலும் கொள்ளை லாபம் அடிக்காமலும் இருக்க, நிலச்சுவான்தார்கள் செய்யவேண்டிய கடமையும் உதவிகளும் என்பது பற்றி ஒலி பெருக்கிய பிரசங்கமாவது :—

நமது நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் உணவுப் பொருள் நெருக்கடியைப் பற்றியும், அந்நெருக்கடியை எப்படித் தீர்ப்பது என்பது பற்றியும் அரசாங்கத்தாரும், நம் நாட்டுத் தலைவர்களும் யோசித்து வருகிறார்கள். யுத்தத்திற்கு வெடிகுண்டுகளும், துப்பாக்கிகளும் எவ்வளவு முக்கியமோ, அதைவிட பதின்மடங்கு முக்கியமாக உள்ளது உணவு. உண்ண உணவின்றி யுத்தத்தில் சண்டை செய்யமுடியாது. யுத்த முன்னணியை அல்லாது, நாட்டில் உள்ள மக்களும் உணவிற்கு கஷ்டப்பட்டால், யுத்த முயற்சி பூரணமாக நடைபெறாது.

ஆகையால் இந்நெருக்கடிக்கு முக்கிய காரணங்கள் எல்லோரும் அறிந்ததே. முதலாவதாக, பர்மா முதலிய நாடுகளிலிருந்து நமக்கு வந்து கொண்டிருந்த முக்கிய உணவுப் பொருளான அரிசி இறக்குமதி செய்ய முடியாதுபோய் விட்டது. தவிர, இப்பொழுது நேச தேசத் துருப்புகள் இங்கிருப்பதால், முன்னைவிட அதிக ஜனத்தொகைக்கு இப்பொழுது உணவு அளிக்க வேண்டியிருக்கிறது. மேலும் வங்காளத்தில் சாதாரணமாக விளையக் கூடியது கூட, கைக்குக் கிட்டாமல், சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட புயற்காற்றினாலும், மழையினாலும் சேதம் ஏற்பட்டுவிட்டது. மற்றொரு காரணம், நமக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களை, சரியான முறையில், எங்கு பார்த்தாலும் எல்லோருக்கும் உணவு கிடைக்கும்படி, பங்கீடுத் திட்டம் பூராவுக்கும் அமுலுக்கு வரவில்லை. இதைவிட முக்கிய காரணங்கள், 5 கோடி விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த உணவுப் பொருள் தான்யங்களை விற்காமல் வைத்திருப்பது. மற்றொரு முக்கிய காரணம் வியாபாரிகள் உணவுப் பொருள்களை அதிக லாபத்தை உத்தேசித்து சேமித்து வைத்திருப்பது. இப்படியாக உணவுப் பொருள் உற்பத்தி செய்பவர்களும், வியாபாரிகளும் உணவுப் பொருள்களை விற்பனைக்குக் கொண்டுவராது, பதுக்கி வைத்திருப்பதனால், தம் தேசத்திற்கும் நம் சகோதர மக்களுக்கும் பெரும் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள். நான், எல்லா வியாபாரிகளுமே அல்லது எல்லா விவசாயிகளுமே தங்கள் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைக்கிறார்கள் என்று சொல்லவில்லை: ஆனால், அம்மாதிரியாகப் பதுக்கி வைப்பவர்கள், இத்தனை லட்சக் கணக்கான மக்கள் கஷ்டப்படும்படி செய்து, ஓர் லாபத்தை அடைய விரும்புவதால், அவர்கள் நம் தேசத்திற்கும் மக்களுக்கும் பெரும் துரோகம் இழைத்தவர்களாவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாயிகளின் கடமை என்ன ?

விவசாயிகளின் கடமைகள்

முதலாவதாக, நம்முடைய நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பொருள் குறையை நிவர்த்திக்க, நம்மால் இயன்ற மட்டும் ஒவ்வொரு குழி நிலத்தையும் சாகுபடி செய்து, அதிகப் பலனைப் பெற வேண்டியதாகும். எப்பொழுதும் தேவைக்குக் குறைவாக இருக்கும் பொருளுக்கும், அகப்படாத பொருளுக்கும் கிராக்கி ஏற்பட்டு விலை உயருவது சகஜம். ஆகையினால் தேவைக்கு மேல் வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துவிட்டால், விலைகள் குறைந்து விடுமென்று எதிர் பார்க்கலாம். இரண்டாவதாக, உணவுப் பொருள்களுக்குக் கிராக்கி ஏற்பட்டு, விலை உயர்ந்திருப்பதற்கு முக்கிய காரணமாக உள்ள உணவுப் பொருள்கள் சேமித்து வைத்தலை, நாம் தடுக்கவேண்டும். தன்னலம் கருதி, பலர், உணவுப் பொருள்களை பதுக்கி வைப்பதனால் தான், எல்லா மக்களுக்கும் வேண்டிய உணவு கிடைக்காது கஷ்டப்படுகின்றனர். இவ்வாறு சேமித்து வைப்பவர்கள் பட்டணங்களில் மாத்திரமல்ல, கிராமாந்திரங்களிலும் இருக்கின்றனர். சேமித்து வைப்பவர்கள் வியாபாரிகள் மாத்திரமல்ல; உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்பவர்களிலும் இருக்கின்றனர். உணவுப் பொருள்களை வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் இடையேயும் சேமித்து வைப்பவர்கள் இருக்கின்றனர். வியாபாரிகள் தாங்கள் அமித லாபம் அடையவேண்டி, உணவுப் பொருள்களை விவசாயிகளிடம் வாங்கி, அதிக விலை கிடைக்கும் வரை பதுக்கி வைக்கிறார்கள். உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்பவர்களோ, தங்கள் விளை பொருள்களுக்கு அதிக விலை கிடைக்குமென்று எதிர் பார்த்து, அவற்றை விற்பனை செய்யாது, தேக்கி வைக்கிறார்கள். அக விலை உயர்வினால், சிறிய விவசாயிகள் கூட, தங்கள் செலவிற்கு வேண்டிய பணத்திற்கு ஒரு பகுதி விளை பொருள்களை விற்றுவிட்டு, மற்றப் பகுதியைத் தேக்கி வைக்கின்றனர். மேலும் உணவுப் பொருள்களை வாங்கிச் சாப்பிடும் மக்களில் சிலர், கிடைப்பதற்கு அரிய உணவுப் பொருள்களை, உயர்ந்த விலை கொடுத்து, தங்கள் தேவைக்கு மேல், பல மாதங்களுக்கு வேண்டிய சரக்குகளை வாங்கிச் சேகரித்து வைத்துக் கொள்வதால், மற்றவர்களுக்குப் போதிய உணவுப் பொருள்கள் கிடைக்காது போய்விடுகின்றது. இப்படியாக ஒவ்வொருவரும் தன்னுடைய சுயநலம் கருதியே உணவுப் பொருள்களை சேமித்து வைப்பதனால் தான், எல்லா விளைபொருள்களும் விற்பனைக்கு வராமல் விலை உயர்ந்து ஏழை மக்கள் வாங்க வழியின்றி, உண்ண உணவின்றி தவிக்கின்றனர். ஆகவே, நம் சுயநலத்தையே கருதாமல், இப்பொழுது நம்முடைய மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை நீக்க ஆவன செய்ய வேண்டும்.

குறை கூற இப்போது இடமில்லை

விவசாயிகளாகிய நாம், நம்முடைய தேவைக்கு வேண்டிய விளை பொருள்களை மாத்திரம் வைத்துக் கொண்டு மேற்கொண்டு உள்ள ஒவ்வொரு மணி தான்யத்தையும் விற்பனை செய்தோமானால் பல்லாயிரக் கணக்கான ஜனங்களின் கஷ்டத்தைத் தீர்க்கலாம். இது வரையில் நமக்குக் கட்டும்படியான விலை நிர்ணயிக்கப்படவில்லை என்ற ஓர் குறைபாடு நமக்கு இருந்தது. இக்காரணத்தினால் பலவிடங்களிலும் நிலச்சுவான்தார்களிடம் விளை பொருள்கள் முழுவதும் விற்பனைக்கு வராமல் தேங்கி யிருந்தன. ஆனால் இப்பொழுது அந்தக் குறை சொல்வதற்கு இடமில்லை. சென்ற மாதத்தில் தான், நம் அரசாங்கத்தார் நம் குறைபாடுகளைக் கேட்டு, நமது முக்கிய விளை பொருளாகிய நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். உணவுப் பொருள்கள் வாங்குபவர்களின் சக்தியையும் நம்முடைய விவசாயச் செலவுகளையும் பரிசீலனை செய்து, இப்பொழுது விலை உயர்த்திக் கொடுத்திருப்பதால், விவசாயிகளாகிய நாம் உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருந்தால், அது முறையாகாது. மேலும் அதிக விலையை எதிர் பார்த்து விளைபொருள்களைச் சேமித்து வைத்தால், நாம் பேராசைப் படுவதே தவிர, வேறு பயனில்லை. நமது லாபத்தை மட்டும் பார்த்தால் போதாது; எவ்வளவு மக்கள் பட்டினியால் கஷ்டப்படுகின்றனர் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். தவிர ஏராளமான அரிசி எகிப்து தேசத்திலிருந்து கப்பல் மூலமாக இந்தியாவுக்கு வந்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. நமது நாட்டுத் தேவைக்கு வேண்டிய அரிசியும் ஆஸ்திரேலியா, கானடா முதலிய இடங்களி லிருந்து கோதுமையும் வந்து நம் நாட்டில் இறங்கி விட்டால், நம் விளை பொருள்களுக்கு விலை உயருமென்று எதிர்பார்க்க இடமில்லை. ஆகவே நம்மிடம் உள்ள விளைபொருள்களை, இனியும் சேமித்து வைக்காமல், உடனே விற்பனைக்குக் கொடுக்க வேண்டியது அவசியம்.

விற்பனை செய்வதற்கு வசதிகள்

சில இடங்களில் விவசாயிகள் தங்கள் தான்யங்களை விற்கத் தயாராக இருந்தும் அவர்கள் விளைபொருள்களை தான்யம் வாங்கும் உத்யோகஸ்தரிடம் விற்கவேண்டிய வசதிகள் இல்லாது தவக்கப்படலாம். அம்மாதிரியான வசதிகளைச் செய்து கொடுக்கவும் அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் குறையாமல் விவசாயிகளுக்கு விலை கிடைக்கச் செய்யவும் தஞ்சை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தைப் போன்ற கூட்டுறவு சங்கங்களின் உதவியை நாடினால், வெகு எளிதில் விவசாயிகளின் விளைபொருள்களை விற்றுக் கொடுப்பார்கள். ஆகவே, எந்த முறையிலாவது நம்மிடம் உள்ள தான்யங்களை விற்பனை செய்ய வேண்டியது, முதற் கடமையாகும்.

அடுத்தபடியாக வியாபாரிகள் நம்மிடம் சரக்குகளை வாங்கிப் பதுக்கி வைக்காதிருக்கும் பொருட்டு, நாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. வியாபாரிகளால் சேமித்து வைக்கப்படுவது, ரஷ்யா தேசத்தைத் தவிர எல்லா நாடுகளிலுமே இருக்கின்றது. ஆனால் இங்கிலாந்தில் அரசாங்க சட்ட திட்டங்களினாலும் முக்கியமாக, உற்பத்தியாளர்கள், பொது மக்கள் முதலியவர்களின் உதவியினாலும் வியாபாரிகள் சரக்குகளை பதுக்கி வைக்காமல் தடுக்கப் படுகின்றார்கள். இதைத் தடுப்பதற்காக வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைத்தும், அவைகளைப் பங்கீடு திட்டத்தின் மூலம் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்தும், ஜீவனத்திற்கு வேண்டிய முக்கிய உணவுகள் எல்லாவற்றிற்கும் உயர்ந்த விலையை நிர்ணயித்தும், எல்லாக் கடைகளிலும் எந்தச் சாமானும் தபால் ஆபீஸ் கார்டுகள், ஸ்டாம்புகள் வாங்குவதுபோல் அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கிடைக்கும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. தவிர கிடைப்பதற்கரிய பொருள்களை சேமித்து வைத்து, அதிக விலைக்கு விற்ற வியாபாரிகள் மீது, அரசாங்கத்தார் ஒரு வருஷத்தில் 40,000 நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. இப்படியாக அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு, பொது மக்களும் ஒத்துழைத்தனர். மேலும் முக்கியமாக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் அதிக நிலம் படைத்தவர்கள், அரசாங்கத்தாருக்கு இவ்வகையில் வேண்டிய உதவி செய்கிறார்கள். தாங்கள் உற்பத்தி செய்த விளை பொருள்களுக்கு உண்மையான கணக்குகளை வைத்துக் கொண்டு தங்களிடம் விளைபொருள்களை வாங்கிய வியாபாரிகளுடைய பெயர், விலாசம் முதலிய விபரங்களையும் சம்மந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு அப்போதைக்கப்போது, தெரியப்படுத்தி விடுகிறார்கள். இப்படிச் செய்வதனால் எந்தெந்த வியாபாரிகளிடம் எவ்வளவு விளைபொருள்கள் இருக்கின்றன என்று அரசாங்கத்தார் தெரிந்து கொள்ள ஏதுவாகிறது. அவ்வாறுகவே நம்முடைய விளைபொருள்களை யாரிடம் விற்பனை செய்கிறோமோ, அவர்களுடைய பெயர், விலாசம் முதலியவைகளையும் என்ன விலைக்கு எவ்வளவு சரக்குகள் விற்கப்பட்டன என்ற விவரமும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினால், வியாபாரிகள் சரக்குகளை பதுக்கி வைக்க இடமில்லாமல் போகும்.

நெருக்கடியைத் தீர்க்க வழி

மேலும் உணவுப் பொருள்களின் விலை உயர்திருப்பதற்குக் காரணம், ஒவ்வொருவரிடமும் பணச் செலாவணி இப்பொழுது அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்று சொலலப்படுகிறது. நம் மக்களில் சிலரிடம் அதிகப் பணச் செலாவணி இருப்பதால் என்ன உயர்ந்த விலையானாலும் கொடுத்து, சாமான்களை வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது, இந்தப் பணச் செலாவணியைக் குறைப்பதற்கு சமீபத்தில் ' எக்கனமிஸ்ட் ' என்று பேப்பரில், வரிகளை உயர்த்தி பணச் செலாவணியை குறைக்க வேண்டு மென்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனல் வரிகளை உயர்த்தாமலே நம்மிடமுள்ள பணச் செலாவணியால் விலைவாசிகள் உயர்த்தப்படாம லிருக்கவும், நம்முடைய பிற்காலத்துக்கு உபயோகப்படும்படி பணத்தைச் சேமித்து வைக்க இப்பொழுது அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் தற்காப்புக் கடன் பத்திரங்களையும் போஸ்டாபீஸ் சேவிங்ஸ் செர்டிபிகேட்டுகள் முதலியவைகளையும் நம்முடைய அதிகப் பணத்தைக் கொண்டு வாங்கலாம். இப்படிச் செய்வதனால், நம் பிற்காலத்திற்கு பொருளைச் சேமித்து வைப்பதுடன் தற்போதுள்ள விலைவாசிகளை உயர்த்தாமல் இருப்பதற்கும் ஏதுவாகிறது.

' ப்ளாக் மார்கெட் ' என்று சொல்லப்படும் சரக்குகளைப் பதுக்கிவைக்கும் வியாபாரிகளிடமிருந்து ஒன்றுக்குப் பலமடங்கு அதிகமாக விலைகொடுத்து, சிலர் தங்கள் தேவைக்கு மேல் சாமான்களை வாங்குவதால், சாதாரண மக்கள் வாங்கக் கூடிய விலையைவிட பதின்மடங்கு விலை அதிகரிப்பதுடன், சாமான்களும் கிடைக்காது போய்விடுகிறது. இதற்கு இங்கிலாந்தில் பல ' விஜிலன்ஸ் கமிட்டீஸ் ' என்று சொல்லப்படும் கண்காணிப்புச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அதிக லாபம் அடிப்பவரையும், அவர்களிடம் சாமான் வாங்குபவரையும் அதிகாரிகள் தெரிந்து கொள்கிறார்கள், இதைத் தவிர ' ஸ்ட்ரீட் விஜிலென்ஸ் கமிட்டி ' அல்லது பேட்டை ' விஜிலென்ஸ் கமிட்டி ' என்ற சங்கங்கள், ஒவ்வொரு நகரத்திலும் பல பாகங்களிலிருந்து அமித லாபம் அடிப்பவரைப் பற்றியும், அவர்களை ஆதரிப்பவர்களைப் பற்றியும் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி தகுந்த தண்டனைக்கு உட்படுத்துகின்றனர். இந்தச் சங்கங்க ளெல்லாம் அரசாங்க உத்யோகஸ்தர்களால் நடத்தப் படாமல், பொது மக்களாலேயே நடத்தப்படுவது, குறிப்பிடத்தக்கது. நமது நாட்டிலும் அரசாங்கத்தார் அமித லாபம் அடிப்பவர்கள் மீதும் முக்கிய பொருளை சேமிப்பவர்கள் மீதும், தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் படுமென்று பல தடவைகள் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுடன், இங்கிலாந்தில் நடப்பதுபோல் பொது மக்களாகிய நாம் எல்லோரும் தன்னலங் கருதாமல் உதவி செய்வோமானால், நாம் நாட்டிற்கே ஓர் பெரிய சேவை செய்தவர்களாவோம். சமீபத்தில் இந்திய அரசாங்க உணவு இலாக்கா மெம்பர் ஸர் ஜ்வாலா பிரஸாத் ஸ்ரீவத்ஸவ அவர்கள், அறுவடைக்கு வரக்கூடிய பயிர்கள் நன்றாக இருப்பதாகவும், வெளி நாடுகளிலிருந்து கப்பல்கள் மூலம் ஏராளமான உணவுப் பொருள்கள் சீக்கிரத்தில் வரப் போவதாகவும், அதனால் இங்குள்ள உணவுப் பொருள்கள் நெருக்கடி சீக்கிரம் குறைந்துவிடு மென்றும் கூறியுள்ளார். ஆகவே, அரசாங்கத்தார் செய்யும் உதவிகளுடன் நாம் இவ்விதமாக உதவிகளைச் செய்தால், இப்பொழுது ஏற்பட்டு இருக்கும் நெருக்கடியை தடுக்கலா மென்பதில் சந்தேகமில்லை.

"யுத்தகாலத்தில் அரசாங்க உதவி"

கோயமுத்தூர்.

"பவானி தாலூக்காவிலுள்ள ஜனங்களுக்கு அரிசி போதுமான அளவு கொடுப்பதற்கு அங்கங்கே, ஏழை ஜனங்களின் உணவுப் பொருள் டிப்போக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய டிப்போக்கள் அம்மாபேட்டை, திருப்பூர், அந்தியூர், ஜம்பை, பவானி, கவந்தம்பாடி, மைலம்பாடி, முதலிய கிராமங்களில் இருக்கின்றன. பட்டாளத்தில் சேர்ந்திருப்பவர்களின் குடும்பத்தார்களுக்கு, மேற்படி டிப்போக்களிலிருந்து, அரிசி போதுமான அளவு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருப்பூர், பல்லடம், சூலூர், முதலிய டவுன்களில் அரிசி பங்கீடு முறை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. கிராமங்களில் உள்ள மற்ற ஜனங்களுக்கும், இந்த அக்டோபர் மாதத்தில் ஸ்பெஷலாக அரிசி சப்ளை செய்ய ஏற்பாடாகியிருக்கிறது.

பட்டாளத்தில் சேர்ந்திருக்கும் சிப்பாய்கள் அல்லது அவர்கள் குடும்பங்களுக்கு கோர்ட்டு அலுவல்களுக்கு இலவசமாக உதவி செய்வதாக திரு T. R. சுந்தரம் பிள்ளை, திரு S. A. ஸுந்தர மேனன் ஆகிய (திருப்பூரிலுள்ள) இரண்டு வக்கீல்கள் முன் வந்துள்ளனர். சிப்பாய்களும், அவர்களின் குடும்பஸ்தர்களும் தேவையான சமயங்களில் அவர்களுடைய உதவியை ஏற்றுக் கொள்ளலாம்.

சென்ற ஒருவாரமாக இந்த ஜில்லாவில் அநேகமாக எல்லாத் தாலூக்காக்களிலும், மழை அடிக்கடி பெய்துகொண்டிருக்கிறது. பயிர்களெல்லாம் செழிப்புற வளர்ந்துகொண்டு வருகின்றன. இதுவரை பயிர் செய்யப்படாத இடங்களில் இப்போது சோளம், ராகி, முதலிய தானியங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன." கோயமுத்தூர் டவுனிலும் புதிய முறையில் அரிசி பங்கீடு செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சேலம்.

மழை பெய்ததன் காரணமாக, பயிர்களின் நிலைமை அபிவிருத்தியாயிருக்கிறது. இதனாலும், சில இடங்களில் சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய உணவு தானியங்கள் அறுவடையாகிறதனாலும், உணவு தானியங்களைப் பற்றிய நெருக்கடி, கிராமங்களில் குறைந்திருக்கிறது.

சேலம் நகரில் உணவு தானியங்களைச் சரிவர விநியோகிப்பதற்காக அடையாளச் சீட்டுகள் (identity cards) கொடுக்கப்பட்டு உணவு தானியங்கள் தட்டில்லாமலும் போதுமான அளவிலும் பொது ஜனங்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பங்கீடு முறையை அமுலுக்கு கொண்டுவர நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்கள் பூர்வாங்க வேலைகள் செய்து வருகிறார்கள்.

தேவைக்கு மிஞ்சி சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உணவு தானியங்களை அரசாங்கத்தார் பெற்று, உணவு தானிய "டிப்போ" மூலியமாக விற்க ரெவினியூ அதிகாரிகள், தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். கூட்டுறவு விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும் இது விஷயத்தில் மிக்க சிரத்தை காட்டி வருகிறார்கள். சேமித்து வைப்பவர்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் தேசீய முன்னணி உத்தியோகஸ்தர்கள், முயற்சி எடுத்துக் கொண்டு, ரெவினியூ அதிகாரிகளுடன் ஒத்துழைக்கிறார்கள். பொது மக்களிடையே, சேமிப்பதாலுண்டாகும் தீங்கையும் எடுத்துரைக்கிறார்கள். ரெவினியூ அதிகாரிகளின் முயற்சியால் பல இடங்களில் உணவு தானிய "டிப்போக்கள்" ஏற்படுத்தப்பட்டு ஏழைப் பொது மக்களுக்கு அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு, உணவு தானியங்கள் விற்கப்பட்டு வருகின்றன.

சேலம் தாலூகாவைச் சேர்ந்த மல்லூரிலும் வேம்படிதாளம் கிராமத்திலும் உணவு தானிய "டிப்போக்கள்" இம்மாதத்தில் ஏற்படுத்தப்பட்டன. பெண்ணாகரம் சப்-தாலூகாவைச்சேர்ந்த பெரும்பாலூர் கிராமத்தில், ஒரு 'டிப்போ' ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நாமக்கல்லில் 1943-ம௵ அக்டோபர்௴ 20உயில் ஸ்ரீமதி ஜே. ஆர். பெட் அவர்கள் ஆதரவிலும் முன்னிலையிலும் அநேக ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. மல்லூர் கிராமத்தில் செடுகுடு பந்தயப் போட்டி விளையாட்டு தினத்தன்று, சுமார் 200 ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. ஆத்தூர் தாலூகாப் போட்டிப் பந்தய விளையாட்டுக் காலத்திலும் பல ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. சேலம் நகரில் தினந் தோறும் சுமார் 100 பிச்சைக்கார குழந்தைகளுக்கு ஸ்ரீமதி ஜே. ஆர். பெட் அவர்களின் முயற்சியால், உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

ஹரூர் தாலூகாவைச் சேர்ந்த ஊத்தங்கரை கிராம வியாபாரிகள் சங்கத்தாலும், கல்லாவி கூட்டுறவு சங்கத்தாலும் உணவு தானிய "டிப்போக்கள்" மூலமாக உணவு தானியங்கள் நியாயமான விலையில் பொது ஜனங்களுக்கு விற்கப்பட்டு வருகின்றன.

ஓமலூர் தாலூகாவில் அதிக தானியங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து தானியங்களை வாங்கி, பொது ஜனங்களுக்கு விநியோகிப்பதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்த, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

ஆத்தூர் தாலூகாவிலும் மற்ற தாலூகாக்களிலும் தரிசு நிலங்களில் தீர்வையின்றி உணவு தானியங்கள் பயிரிடவும், புழைக்கடைகளில் காய்கறிகள் பயிரிடவும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆத்தூர் தாலூகாவில் அதிக நிலங்களை பாசனத்துக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

மண்ணெண்ணெய், சர்க்கரை முதலியன சம்பந்தமாக, கஷ்டம் குறைந்திருக்கிறது. விறகு சம்பந்தமாக கஷ்டமிருக்கிறது. அதிகாரிகள் இது விஷயம் பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

சிப்பாய்களின் குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி அளிக்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஷை மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளை தாலூகா பிரசாரகர்களும், ரிவினியூ அதிகாரிகளும், ஜில்லா ராணுவ போர்டு உத்தியோகஸ்தர்களும் செய்து வருகிறார்கள்.

சேலம் நகரிலும், சுற்றுப் பக்கத்திலும் பல நெசவாளிகள் அரசாங்க நெசவுத் திட்டத்தின் கீழ் வேலைசெய்து பிழைத்து வருகிறார்கள்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

தமக்குத் தேவையானவற்றை யெல்லாம் உக்ரேன் உதவுமென்று ஜெர்மானியர்கள் முதலில் திட்டமிட்டார்கள். ஆனால், பிற்காலத்தில் ஜெர்மானியர்களின் கையைக் கடிக்க அது ஆரம்பித்துவிட்டது. உக்ரேனில், நிலக்கரி, விவசாய இயந்திரங்கள், மைகள், ரயில் வ இஞ்சின்கள், வண்டிகள், அவற்றைப் டமுது பார்க்கத் தகக எ·.குத் தொழிற் சாலைகள் முதலியவை எல்லாம் ஏராளமாய் இருக்கின்றன. என்றாலும அவற்றைப் பயன்படுத்த வேண்டி ஜெர்மானிய கள் செலவு செயத பணத்திற்கும் முயற்சிக்கும் எற்ற அளவு கூட, அவர்கள் சாதமடைய வில்லை யென்று தெளிவாகத் தெரிகிறது. உக்ரேனைச் சுரண்டி விடலாமென்னும் ஆசை கொண்டு, ரோசன்பர்க் தூண்டுதலுக்கு இணங்கி அங்கே போய்க் குடி யேறிய ஜெர்மானியர்களெல்லாம் அவசர அவசரமாக அந்நாட்டை விட்டே காலி செய்து விட்டுத் திரும்ப ஓடி வருகிறார்கள்.

உக்ரேனில் நிலக்கரியும் மங்கனிசிலையும் ஏராளமாகக் கிடைக்கின்றன. யுத்தத்திற்கு முன்பு மிகச் சிறந்த வகை இரும்பு, 1 கோடியே 60 லட்சம் டன் இங்கே கிடைத்தது. இந்தச் சுரங்கங்களில் வேலை செய்ய மின்சாரம் வேண்டும். இந்த மின்சார இயந்திரங்களெல்லாம் ஜெர்மானியர் கைப்பற்றியபோது அவர்களுக்குப் பயன்படக் கூடாதென்னும் நாசக் கொள்கையைக் கையாண்டதால், தரை மட்டத்தில் கிடைத்த மண் கலந்த உலோகங்களை மட்டுந்தான் ஜெர்மானியர்கள் அடைய முடிந்தது. மங்கனிசிலைச் சுரங்கங்களிலிருந்து யுத்தத்திற்கு முன்பு எடுத்தது போல, ஜெர்மானியர்கள் எதுவும் எடுக்க முடியவில்லை. கூடியவரை மங்கனிசிலையைச் சிக்கனமாகவே பயன்படுத்த வேண்டுமென்று ஜெர்மன் அரசாங்கம் விடுத்துள்ள உத்திரவிலிருந்து, அது எந்த அளவிற்கு அவர்களுக்குப் பஞ்சமாயிருக்கிறதென்று தெரிகிறது. சமீபத்தில் ரஷ்யர்கள் கைப்பற்றிய சபொரெஷியிக்கு சுமார் 100 மைல்களுக்கு அப்பாலுள்ள க்ரிவாய் ராக்கிலுள்ள இருப்புச் சுரங்கங்கள், டினீபர் நதிக்கு மேற்கேயிருக்கின்றன. இவற்றிலிருக்கும் ஜெர்மானியர்களுக்கு, இரும்பு கிடைத்திருக்குமா வென்பதும் சந்தேகந் தான்.

இந்தக் கோடை காலத்தில் செம்படைகள் அடைந்த வெற்றிகளுள் தலை சிறந்தவை (1) டானெட்ஸ் பகுதியை மீண்டும் கைப்பற்றினது. (2) உக்ரேனின் கீழ் பகுதியிலிருந்து ஜெர்மானியர்களை விரட்டியது. இன்று தாம் உக்ரேனை வென்று விட்டதாகப் பெருமை யடித்துக் கொள்ள ஜெர்மானியர்களால் முடியாது.

படைகளுக்கு இளைப்பாறும் விடுதி

"தம் சொந்த வீடுவாசல்களையும் குடும்பத்தையும் விட்டு வந்திருப்பவர்களின் வாழ்க்கை இன்பகரமா யிருப்பதற் குரிய எல்லா வசதிகளும் செய்வது மிகவும் நல்ல காரியந்தான்", என்று தென் படைத் தலைவரின் மனைவியான லேடி பிரெய்ல்ஸ் போர்ட்டு பியர்ஸ், பெங்களூர், கமர்ஷியல் தெரு, 1-ம் நம்பர் கட்டடத்தில் 'படைகளுக்கு இளைப்பாறும் விடுதி'யைத் திறந்து வைக்கும் போது குறிப்பிட்டார்.

இந்த விடுதியை வழங்கியவர்கள் 'பம்பாய் டெய்லரிங் கம்பெனி'யார். பெங்களூரிலுள்ள பிரிட்டிஷ் படைகளுக்காகவே இது வழங்கப்பட்டிருக்கிறது. சுகமான நாற்காலிகளும், மேஜைகளும், சாய்ப்பு மேஜைகளும், விடுதிக்குள் விளையாடத்தக்க ஆட்ட வசதிகளும் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும் பல சஞ்சிகைகளும் அங்கே கிடைக்கத் தக்கபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இநத விடுதியை ஏற்படுத்திய மிஸ்டர் பிரெட்ரிக் ஹார்வேயையும், மிஸ்டர் ஜான் ஸ்பியர்ஸையும் பாராட்டிப் பேசிய லேடி ப்ரெய்ல்ஸ் போர்டு பியர்ஸ் கூறியதாவது :—

"இந்த விடுதி, கடைத் தெருவின் மத்தியில் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட விடுதி, நெடுநாட்களாகத் தேவையாயிருந்தது தான். படையினர் வந்து தங்குவதற்கு இது மிகவும் எற்ற இடமாயிருக்க வேண்டும். அவர்கள் இங்கிருந்து கொண்டு கடிதங்கள் எழுதலாம். தாம் வாங்க வேண்டிய பொருள்கள் எங்கே கிடைக்கும், விலை என்ன, முதலிய விவரங்கள் இந்த விடுதியில் படையினருக்குக் கிடைக்கும். இந்த விடுதியிலுள்ள நாற்காலிகள் மேஜைகள் முதலியவற்றை பம்பாய் 'டெய்லரிங் கம்பெனியார்' இரவல் கொடுத்தது மட்டுமன்றி, ரூ. 200-க்கு மற்ற சாமான்களும் வாங்கி உதவி யிருக்கின்றனர். இந்தக் கம்பெனியார் மட்டுமன்றி, பெங்களூரிலுள்ள திருவாளர்கள் சந்திரன், தேவிதாஸ், 'க்ரீன் ஷாப்'காரர்கள் ஆகியோரும் உதவி யிருக்கிறார்கள்.

இந்த விடுதி ஆரம்ப விழாவிற்கு, பெங்களூர் கலெக்டர் மிஸ்டர் எப். ஜி. ஏ. மாரிஸ், மைசூர் கனம் ஸ்தானீகரின் காரியதரிசியான மிஸ்டர் எ இ. ட்ரேக், ஸ்ரீமதி ட்ரேக், முதலியோர் விஜயம் செய்திருந்தனர். பாண்ட் வாத்தியக் கச்சேரியும், நடைபெற்றது.

இந்த விடுதி காலை 10 மணி முதல் மாலை 6-30 வரை திறந்திருக்கும்.

இந்தியப் பெண்கள் உதவிப் படை

வீர உணர்ச்சியும் நாட்டுப் பற்றும் ஏற்படுகின்றன

விதிகளும் கட்டுத் திட்டங்களும்

ஸ்ரீமதி மோனு ஹென்ஸ்மன்

உலகிலுள்ள அனைவருக்கும் ஒரு விஷயத்தில் அக்கரையுண்டு. தன் சொந்த நாடு, தம் நாட்டு மக்கள் ஆகியவை பற்றியது தான் அந்த அக்கரை. ஏனென்றால், தம் மக்கள், பேரப் பிள்ளைகள் ஆகியோரின் எதிர்கால வாழ்வைக் குறித்து முன்னதாகவே அவர்கள் திட்டமிட வேண்டியிருக்கிறது. இது வரை பெண்கள் பெரும்பாலும் தம் குடும்பக் காரியங்களையே கவனித்து வந்து கொண்டிருந்திருக்கிறார்கள். ஒரு சிலர், உபாத்திமைத் தொழில், மருத்துவத் தொழில், தாதித் தொழில், வியாபார ஸ்தலங்களில் உதவியாளராயிருப்பது முதலிய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த யுத்த காலத்திலுங் கூட, ஆண்களுக்கு வெகு தூரத்திற்கப்பால் தான் பெண்கள் இருக்கிறார்கள்.

இப்போது இந்தியா யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே, அது தன் மூல பொருள்களை யெல்லாம் உபயோகிக்க வேண்டும், குறிப்பாக, பெண்களின் ஆற்றலைத் தகுந்தபடி பயன் படுத்த வேண்டும். நமது ஆண்பிள்ளைகள் செயயும் வேலைகளுக்குத் துணையாக உள்ள வேலைகளைத் தான், நாம் செய்து கொண்டிருக்கவேண்டும். நாம் ஓரே படையினர்; நமது நோக்கமும் ஒன்றே. நாம் நமது வேலைகளை எவ்வளவு திறமையுடன் செய்கின்றேமோ, அவ்வளவு திறமையுடன், நாம் போர் முனைக்கு அனுப்பும் படையினர் போராடுவார்கள்.

1942-ம் வருஷம் எப்ரல் மாதம் இந்தியப் பெண்கள் உதவிப் படை ஆரம்பமானது. தம் நாட்டிற்குத் தேவைப்படும் போது, ஆண்களுக்குத் துணையாக எந்தெந்த வழிகளில் பெண்களும் உதவலாம் என்பது பற்றி அவர்களுக்கு வழி காட்டப் பட்டது. சகோதரர்களும், கணவர்களும், மாமன்மார்களும், சிற்றப்பன்மார்களும், அவர்களுடைய மக்களும் போர் முனையில் தரைப படையிலாவது, கடற் படையிலாவது, விமானப் படையிலாவது, ஏதாவது ஒரு பதவியி லிருக்கின்றனர். ஆகையால், இந்தியாவிலுள்ள பெண்கள்—ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும், இந்தியர்களும்—ஒன்று பட்டு ஒத்துழைப்பது இயற்கை தான். அவர்கள் ஒருவரை யொருவர் நம்பத் தான் செய்வார்கள். தம் முதல் தலைவியாராகிய லேடி ஜேமஸிடமும், இந்தியப் பெண்கள் உதவிப் படையின் போஷகரான மேன்மை தங்கிய வைசிராயவர்களின் மனைவியாரிடமும் நம்பிக்கை கொண்டிருப்பதும் நியாயந் தான்.

வயிற்றிற்குச் சோறும், உடுக்க உடையும் தேவைப் படுகிறவர்கள் மட்டும் தான் இந்தியப் பெண்கள் உதவிப் படையில் சேருகிறார்கள் என்பதல்ல. இந்தப் படையில் சேர்ந்திருக்கிற பெண்களின் பெற்றோர்களும் போஷகர்களும் அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளுவதற்கு வேண்டிய தொகையை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பெண்கள், தம் நாட்டிற்குத் தொண்டாற்ற வேண்டும் என்னும் ஆசை கொண்டிருக்கிறார்கள். தாம் அடைந்துள்ள பயிற்சியைத் தம் நாட்டின் தொண்டில் பயன் படுத்துகிறார்கள். சற்று வயது முதிர்ந்தவர்கள், 'ப்ளாடூன்' தலைவர்களாகவும், க்வார்டர் மாஸ்டராகவும், 'மெஸ் சார்ஜெண்ட்' ஆகவும், படைக்கு ஆள் திரட்டுவோர்களாகவும் பதவி வகிக்கிறார்கள். ஏனென்றால், இந்தப் பதவிகளி லிருப்பவர்களுக்கு ஓரளவிற்கு வாழ்க்கை யனுபவம் வேண்டும். இந்தத் துறையில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு ஏற்ற முடிவு காண்பதற்கான அனுபவ ஞான முதிர்ச்சி வேண்டும்.

உயர்வடைய சந்தர்ப்பங்கள் உண்டு.

இந்த இந்தியப் பெண்கள் உதவிப் படையில் சேருகிற இளம் பெண்கள், உயர்வடைவதற்கு மிகுந்த சந்தர்ப்பங்களுண்டு. இதற்கு அவர்கள் பூரணமாகத் தொண்டாற்றி, தம் வாழ்க்கையின் தலையாய பயனையடையத் தக்கபடி தமக்கு விதிக்கப்பட்டுள்ள பலவகை வேலைகளிலும் நற்பெயரெடுக்க வேண்டும். இவர்களை இராணுவங்களோடு அனுப்பலாம்; அல்லது போராடும் படைகளைச் சேர்ந்த பலவகை அலுவல்களுக்கும் அனுப்பலாம். தொடர்ச்சியாக நான் 8 மணி நேரம் வேலை செய்கிறேனென்று அவர்கள் வாக்குறுதி கொடுக்கலாம்; ஆனால் அது அவ்வளவு எளிய காரிய மல்ல. அவர்கள் செய்ய வேண்டிய வேலை, மன ஊக்கந் தரக் கூடாததா யிருக்கலாம். இளம் பெண்கள் உள்ளத்தைக் கவரத் தக்க பல வகைக் கவர்சிகளுக்கும் அவர்கள் ஆளாகலாம். இவற்றை யெல்லாம் வெல்லுவது எளிதல்ல. இந்தப் படையில் சேர்ந்திருக்கிறவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவும், முக மலர்ச்சியோடும் இருந்து எந்தக் காரியத்திலும் நேர்மையாக நடந்து கொள்ளுகிறவர்கள் என்னும் பெயர் வாங்கினவர்கள். தம் நாட்டின் நன்மை தான், அவர்கள் உள்ளம் நிறைந்த ஆசை. ஆகவே தான தம் நாட்டைப் பாதுகாக்க முனைந்திருக்கிறார்கள். இது அவர்கள் மேற்கொண்டுள்ள கடமை.

இந்தப் படையில் சேருகிறவர்களுக்கு ஒரு முக்கியமான கட்டு திட்டமுண்டு. அதாவது, யுத்தம் முடிகிற வரையிலும், அதற்குப் பிறகுங் கூட, எவ்வளவு காலம் அவருடைய ஊழியம் இராணுவத்திற்குத் தேவையா யிருக்கிறதோ, அது வரையிலும், தாம் ஊழியம் செய்வதாக அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியப் பெண்கள் உதவிப் படையில் சேர்ந்து, தம் உயிரையும் கொடுக்க இளம் பெண்கள் சம்மதிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பெற்றோர்களும் போஷகர்களும், தம் சிறுமிகள் கால அளவில்லாதபடி ஒரு ஊழியத்தை மேற் கொள்ளுவது பற்றி, அளவு கடந்து அச்சங் கொள்ளுகிறார்கள். இந்தப் படையில் சேர்ந்து தொண்டாற்றுவதாக, தீவிர ஆலோசனை செய்த பிறகு, இப் படையில் சேர்ந்து, அதினின்று சாதாரணமாக ராஜிநாமா செய்ய விரும்பக் கூடாது. ஆனால், உடல் நலமில்லாத காரணத்தினாலேயாவது, அல்லது அவருடைய எதிர்கால நன்மை பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என்று எற்பட்டால் மட்டும், ராஜிநாமாச் செய்யலாம்.

கட்டு திட்டங்கள்.

இந்தப் படையில் சேருவதற்கு இரண்டு வகைக் கட்டுதிட்டங்கள் உண்டு. இந்தப் படையுள்ள நகரங்களில் வசிக்கும் பெண்கள், தம் 'ப்ளாடூன்' தலைவியார் மேற்பார்வையில் நடைபெறும் விடுதியில் வசிக்கலாம். அல்லது, வேலை முடிந்த பிறகு, தத்தம் வீடுகளுக்குப் போகலாம். முதலில் கூறியுள்ள விடுதி 'ப்ளாடூன்' தலைவியார் மேற்பார்வையிலும், 'மெஸ் சார்ஜெண்டு' மேற்பார்வையிலும் நடைபெறுகிறது. இது ஒரு இராணுவக் கட்டுப்பாடுகள் உடைய படையாகையால், இரவு வேலை யென்றும் பகல் வேலை யென்றும் உண்டு. அப்போது ஒவ்வொருவருக்கும் வேலை முறை விதிக்கப்படும். இங்கே அவர்களுக்கு உணவும் இருப்பிடமும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவையன்றி மாதந்தோறும் சம்பளமும் கிடைக்கிறது. உள்ளூரிலேயே யிருந்து வேலை பார்க்கிறவர்களை விட, பொது வேலைத் திட்டத்தை மேற்கொள்ளுகிறவர்களுக்குச் சாதகங்கள் மிகவும் உண்டு. பிற நாடுகளிலுள்ள பல ஊர்களையுங் கண்டு நேரில் உண்மை விவரங்களை உணர்ந்து கொள்ளலாம். இந்தியாவிலுள்ளவற்றில் எவற்றை யெல்லாம் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று அவர்கள் தெரிந்து கொள்ளக் கூடும். அன்றியும், அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தை எங்கேனும் ஒரு பாங்கியிலோ அல்லது வேறிடத்திலோ, முதலீடாகப் போட்டு வைத்து விடலாம். அதாவது அவர்களுடைய சம்பளத்தில் ஒரு செம்புச் சல்லி கூட செலவு செய்யாமல், மிச்சப் படுத்திக் கொள்ளலாம். பொது வேலைத் திட்டத்திற்கு உட்பட்டவர்களை எந்த ஊருக்கு மாற்றினாலும் அங்கே போவதற்குச் சித்தமாயிருக்க வேண்டும். ஆனால் உள்ளூர் வேலைத் திட்டத்திற்கு உட்பட்டவர்கள், விரும்பினால் மட்டுந் தான் பிற ஊர்களுக்கு மாற்றப்படுவார்கள். அவர்கள் எந்த ஊருக்கு மாற்றிக் கொள்ள விரும்புகிறார்களோ அந்த ஊருக்கே மாற்ற எல்லா வகைகளிலும் முயற்சிக்கப்படும். அப்போது உணவும் இருப்பிடமும் தம் பெற்றோர்களுடனாவது அல்லது நண்பர்களுடனாவது வைத்துக் கொள்ள அவர்கள் ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும். ஒழுங்கு முறை, பணம் பட்டுவாடா செய்வது, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றுவது முதலியவை பற்றிய எல்லாம், 'பளாடூன்' தலைவியாரைப் பொருத்துத் தான் இருக்கிறது. இது ஒரு நல்ல ஏற்பாடு தான். எப்படியென்றால், இந்தப் பெண்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் நேரில் உணர்ந்து அவற்றைப் போக்க, ஒரு பெண் உத்தியோகஸ்தரே இருப்பது மிகவும் வசதியான தல்லவா?

தகுதிகளும் சம்பளமும்.

தகுதியுள்ளவர்களுக்கு, அதாவது சுருக்கெழுத்து எழுதுவதிலும், 'டைப்' அடிப்பதிலும் அரசாங்கத்தார் நடத்தும் பரீட்சையில் தேறியுள்ளவர்களுக்கு மாதம் ரூ. 120-ம், 'டைப்' அடிப்பதில் மட்டும் தேறியுள்ளவர்களுக்கு மாதம் ரூ. 100-ம் சம்பளம் கிடைக்கும். இந்தத் தகுதிகள் உள்ளவர்கள் அவசரமாகத் தேவை. உடனடியாகக் கமிஷன் பதவிகள் வழங்கப்படு மென்று யாரும் எதிர் பார்க்க முடியாது. ஆரம்பப் படியில் தான் சேர்ந்து, பிறகு படிப்படியாக உயரவேண்டும். பதவியில் உயருவதற்குத் திறமை தான் முக்கியம். இந்தப் படையில் சேர்ந்திருப்பவர்களுள் சாதி, மத, நிற வேற்றுமை எதுவும் கிடையாது.

படையில் சேரும் பெண்கள் ஒவ்வொருவருக்கும் உடுப்புக்களுக்காக ரூ. 140 கொடுக்கப்படுகிறது. அந்தப் பெண்களுக்குத் தேவையான அனைத்தும், இந்தத் தொகையைக் கொண்டே வாங்கப்படுவதற்காக 'ப்ளாடூன்' தலைவியார் அக்கரை யெடுத்துக் கொள்ளுகிறார்கள். அதாவது, தம் உடைகளின் பொருட்டு, ஒரு தம்படி கூட கையிலிருந்து அவர்கள் செலவு செய்ய வேண்டிய தில்லை. மழை காலத்தில் அணிந்து

கொள்ளுவதற்கு உடுப்புகள் வாங்கிக் கொள்ளும் பொருட்டு ஒரு தொகையை விசேஷ அலவன்சாகக் கொடுக்கிறார்கள். அன்றியும் வருஷந்தோறும் புது உடுப்புக்கள் வாங்கிக் கொள்ளும் பொருட்டு, தனிப்பட்ட ஒரு அலவன்ஸ் கொடுக்கிறார்கள். இராணுவ விதிப்படி இராணுவ வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போது, இராணுவ உடைகளை யவர்கள் அணிந்து கொண்டிருக்க வேண்டு மென்பது விதி. ஆனால், அவர்களுடைய வேலை நேரம் தீர்ந்த பிறகு, அவர்கள் தம் அழகிய சொந்த உடைகளை யணிந்து கொண்டு தம் இஷ்டம் போல் போகலாம்.

இந்தப் படையில் சேருகிற ஒவ்வொருவரும் ஒரு வைத்தியப் பரீட்சைக்கு உள்ளாக வேண்டும். இவர்களைப் பரீட்சிக்கும் பொருட்டு ஒரு பெண் டாக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒவ்வொருவரின் உடல் நிலைப் பற்றியும் ரிக்கார்டுகள் வைக்கப்படுகின்றன. அவற்றில், அவரவருக்கு உண்டான நோய்கள், என்னென்ன மருந்துகள் கொடுக்கப்பட்டன, என்னென்ன ஊசி மருந்துகள் குத்தப்பட்டன என்றென்று அம்மை குத்தப்பட்டது என்று பதிந்து வைக்கப்பட்டிருக்கும். அவசியமானால், இந்த விவரங்களையெல்லாம், இலவசமாக அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

விடுதிகளில் இந்தப் பெண்களுக்கு எல்லா வசதிகளுமுண்டு. நன்றாகப் பராமரிக்கப்படுகிறார்கள். கூடுமான வரை அவர்கள் வெளியே போக வர அனுமதிக்கப்படுகிறார்கள். என்றாலும் அவர்கள் அடங்கி நடக்க வேண்டிய கட்டு திட்டங்களும் உண்டு.

முன்னேற்றங்கள்.

பெண்கள் முன்னேற்ற மடைய வேண்டும்; அப்போதுதான் நாகரிகம் மேம்படும் என்றெல்லாம் மேடைப் பிரசங்கங்களும், பிரசாரங்களும் பலமாக நடைபெற்றன; இன்னும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இது ஒரு நல்ல வேலை தான். இந்தச் சீர்த்திருத்தக்காரர்கள் கூறியவற்றை நடை முறையில் நடத்துவிக்கிறவர்கள் இந்தியப் பெண்கள் உதவிப் படையினர். பெண்களுக்குச் சந்தர்ப்பங் கிடைத்தால், எவை எல்லாம் செய்து முடிக்க வல்லவர்கள் என்று எடுத்துக் காட்டுவதற்கு இந்தியப் பெண்கள் உதவிப் படை ஒரு சான்றாக விளங்குகிறது. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், மற்றும் வாழ்க்கையின் பல துறைகளிலும் தேர்ச்சியும் அனுபவமும் பெற்றவர்களுக்கு, இது நேர்முகமானதோர் சந்தர்ப்பத்தை யளிக்கிறது. இதுபற்றி மேலும் கூறவேண்டியதில்லை. கீழ்நாட்டுக் கலைகளுக்கும் மேல்நாட்டுக் கலைகளுக்கும் ஒப்ப, அவர்கள் நடந்து கொள்ளுவார்கள் என்று மட்டும் குறிப்பிடுவது போதுமானதாகும்.

இந்தப் படையின் பிரதம படைத் தலைவியார் மேன்மை தங்கிய லேடி லின்லித்கோ அவர்கள். அவர்கள் சமீபத்தில் ஒலிபெருக்கிய தோர் வானொலிப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:—

"இப்பொழுது இங்கிலாந்தி லிருப்பது போலவே, பல வீரப் பெண்மணிகள் பண்டைக் காலத்தில் இந்தியாவிலும் இருந்திருக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் உதவிப் படையின் அணிவகுப்பை விமானப் படைத் தலைவர் கமோடார் பி.எச். ப்ளாக் ஓர்த் பார்வையிடுகிறார்.

விடுமுறை.

உத்தியோகஸ்தர்களுக்கும் "பிரிட்டிஷ் ரிசர்வ்" உத்தியோகஸ்தர்களுக்கும் விடுமுறை கொடுக்கப்படுவதைப் போலவே, இவர்களுக்கும் விடுமுறைகள் கொடுக்கப் படுகின்றன. ஆனால், இந்தப் படையைச் சேர்ந்தவர்களின் கணவன்மார்கள் வெளிநாடுகளிலுள்ள போர்முனைக்குப் போய் திரும்பி வந்திருந்தால், 31 நாட்களுக்கு அதிகப் படாமல் விசேஷ யுத்த விடுமுறை இவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்கள் விடுமுறைக்கு உரியவர்களாயிருந்தாலும் இல்லா விட்டாலும் இந்த விடுமுறை அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் போக வர படிச் செலவு அதிகப்படியாக அவர்களுக்கு அளிக்கப்பட மாட்டாது.

இப்படையில் சேர்ந்துள்ள ஒருவரின் கணவரோ அல்லது சார்ந்திருக்கப்படுகிறவரோ ஒரு ஊரிலிருந்து வேறொரு ஊருக்கு மாற்றப்பட்டு விட்டால், இந்தப் படையைச் சேர்ந்தவரையும் அந்த ஊருக்கு மாற்றி விடலாம். இதனால் வேலைக்குக் குந்தகம் ஏற்படாது என்று தெரிந்தால் மட்டுந்தான், பொது வேலைத் திட்டத்திற் குட்பட்டவர்களுக்கு, விடுமுறை யளிக்கப்படும்.

இந்தப் படையில் சேருகிறவர்களுக்கு பலமும் திறமையும் வேண்டும். இவர்கள் வயது 17 முதல் 50 வரை யிருக்கலாம். சென்னைப் பகுதியிலுள்ளவர்கள் குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிகுலேஷன், ஹைஸ்கூல் பரீட்சை, அல்லது கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சை ஆகிய எதாவதொரு பரீட்சையில் தேறியவர்களா யிருக்க வேண்டும். ஏனென்றால் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் வேறு வேலைகளுக்குக் கொண்டு போகப்பட்டு விட்படியால், அவர்கள் செய்து வந்த வேலைகளைச் செய்யக் கூடிய திறமை, இவர்களுக் கிருக்க வேண்டும். இராணுவ வேலைகளைச் செய்யும் அனைவரும் ஆங்கிலம் நன்றாக எழுதவும் பேசவும் தெரிந்தவர்களா யிருக்க வேண்டியது அவசியம். மற்றும் டைப் அடிக்கிறவர்களுக்கு நிமிஷம் 30 வார்த்தைகள் விகிதம் அடிக்க தெரிந்திருக்க வேண்டும். அன்றியும் "டெலிபோன் ஆபரேடர்" பயிற்சி உள்ளவர்களாக அந்த வேலைக்கு நியமிக்கப்பட வேண்டும்.

இந்தியப் பெண்களின் வீரத்தைக் குறித்தும் தலைசிறந்த சகிப்புத் தன்மையைக் குறித்தும் இன்றும் கூட, அநேக கதைகள் கூறப்படுகின்றன. இன்றுள்ளவர்களின் உடலில் ஓடுவதும் அதே வீர இரத்தந்தான். நம் பழைய காலத்திய சகோதர்களின் வழிப்படி நடக்க நம்மால் முடிய வில்லை யென்றோ, நமக்கு மனமில்லை யென்றோ, பிறர் குறை கூறும்படி விட்டு விடக்கூடாது."

"இந்நாட்டுப் பெண் மக்களிடம் எனக்கு நம்பிக்கை யுண்டு. நீங்களும் நானும் எல்லோரும் சேர்ந்து முன்னேறிப் போவோம். எப்படிப்பட்ட சேதம் நேர்ந்தாலும், படை யெடுத்து வருகிறவர்களை எதிர்த்து நின்று வீரத்தோடு விளங்குவதில், இந்தியப் பெண்கள் மற்ற எவருக்கும் சளைத்தவர்களல்ல வென்று உலகறியச் செய்வோம்."

உள்நாட்டு அரண்.

இன்னும் அநேகம் பெண்கள் படைகளில் சேர வேண்டும். படைகளில் உள்ள தொழில்களையோ வேலைகளையோ மட்டும் பெண்கள் மேற்கொண்டால் போதாது. தொண்டாற்ற வேண்டும் என்னும் உணர்ச்சியினால் ஊக்கப்படுகிறவர்கள் வேண்டும். இந்தியக் கடற் கரை யோரத்தி லெல்லாம் துப்பாக்கியும் கையுமாக நம் படையினர் இருக்கின்றனர். இவர்கள் வெளி யரண். இந்த வெளி யரணுக்குள்ளே ஒரு உள்ளரண் உண்டு இதுதான் இந்தியப் பெண்கள். இந்த அரணில் சேரும், அதாவது இந்தியப் பெண்கள் உதவிப் படையில் ஒரு பெண் சேருவதனால், ஒரு ஆண் மற்றொரு வேலைக்குப் போக இடமேற்படுகிறது. இந்த ஆண்கள் போர்முனைக்குப் போய் கடுமையாகப் போராடக் கூடும். உங்கள் படையைப் பற்றி நீங்கள் பெருமை யடையலாம். உங்கள் உடுப்பும் உங்கள் வேலையும் உங்களுக்குப் பெருமை யளிக்கின்றன. இந்த யுத்தம் முடிந்து, புதுலகம் அமையும்போது, இந்த உள்ளரண்களா யமைந்துள்ள பெண்கள், தாமும் தம் நாட்டிற்கு அருந் தொண்டாற்றினோ மென்று பெருமிதங் கொள்ளுவார்கள். யுத்தம் முடிந்த பிறகும் பலவகை வேலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களா யிருப்பார்கள். இவர்கள், இந்தியாவிற்கும், பிரிட்டனுக்கும், உலகத்திற்குமே மிகச் சிறந்த தொண்டாற்றக் கூடியவர்களாயிருப்பார்கள்.

வீ ர ருஷ் ய ர் க ள்

சென்ற நான்கு வருடங்களாக யுத்தம் அதி பயங்கரமாக நடந்து வருகிறது. சென்ற இரண்டு வருடங்களாக அதன் கோரம் ருஷ்யாவிலே வெகு அதிகம். ஆனால் கூடிய சீக்கிரமே யுத்தம் நின்று விடக்கூடும்; அப்பால் உலகெங்கும் சமாதான தேவி பிரசன்னமாகி யிருப்பாள் என்று சொல்ல இப்பொழுது தான் நமக்குக் கொஞ்சம் தைரியம் வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு நமக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்திருப்பதற்குக் காரணம், சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் அடிக்கடி கலந்தாலோசித்ததன் பயனாக வட ஆபிரிகாவிலும், ஸிஸிலியிலும், இத்தாலியிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், அவற்றின் முடிவுகளும் ஒன்று; ருஷ்யர்கள் ஒரே திடமனதுடன் ஜெர்மானியரைக் கதிகலங்க அடித்து, ருஷ்ய மண்ணிலிருந்தே அவர்களைப் பின் வாங்க ஓடச் செய்து வருவது இரண்டு.

ருஷ்யர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எத்தனையோ லக்ஷக் கணக்கான வாலிபர்களும், பெரியவர்களும் போர்க்களத்தில் மடிந்திருக்கின்றனர். எத்தனையோ நகரங்கள் எதிரி வீசிய குண்டுகளாலும், அந்நகரங்களில் ஊன்றிக் கொண்ட எதிரியை விரட்டி யடித்து, அந்நகர்களை மீட்க ருஷ்யர்கள் வீசிய குண்டுகளாலும் பாழாகி யிருக்கின்றன. வீடுவாச லற்று, குழந்தை குட்டி, ஆடு கன்றுகளை இழந்து, பலர் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பல பிரமாண்டமான தொழிற்சாலைகள் நாசமாகி விட்டதால், வேலையற்றுப் போய்விட்டார்கள் தொழிலாளிகள். ருஷ்யாவின் களஞ்சியம் போன்றிருந்த யூக்ரேன் பிரதேசம் முழுவதும் ஜெர்மானியர் வசப்பட்டுக் கிடந்தது. கடும் பனி ஒரு பக்கம் வந்து வந்து வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது.

ஆனால், ருஷ்யர்களின் வீரம் மட்டும் குன்றவே யில்லை. அவர்களது மனோ நிலைமை அமைதியை இழக்கா திருந்தது. நம்பிக்கையை அவர்கள் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்களே ஒழிய, நழுவ விடவில்லை. அவர்களது இதயங்களிலே, தேச பக்தி பொங்கிக் கொண்டிருந்தது. எப்பொழுது முள்ள ஜெர்மன் துவேஷம் இன்னும் முற்றி விட்டது. இந்தப் பயல்களை இப்படியே வர விடுவது தவறு என்ற எண்ணம் ஒவ்வொரு ருஷ்யரது மனதிலும் நன்றாகப் பதிந்து விட்டது. அவர்களுக் கெல்லாம் தலைவர்களாக அமர்த்தப்பட்டவர்களோ, மகா சூரர்கள். நவீன யுத்தத்தை பற்றிச் சகலமு மறிந்தவர்கள். வெகு காலமாக, உலகத்தின் கண்களில் படாமலே இருந்து, செய்த ஆராய்ச்சிகளின் முடிவை, இப்பொழுது உலகோருக்குக் காட்ட நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது என்று எண்ணி மகிழ்ந்தார்கள் அவர்கள். இத்தகைய தலைவர்களின் கீழ், மேலே சொன்ன ருஷ்யர்கள் உத்சாகத்தோடு சேவை செய்து அத்தலைவர்களின் திட்டப்படி வெறி கொண்டவர்கள் போலப் போராடி வருகிறார்கள்.

இப்படி யெல்லாம் நடக்கும் ருஷ்யாவிலே என்று, ஹிட்லர் கனவிலே கூட எண்ணி யிருக்க மாட்டார். அவர் என்ன, உலகோரே எண்ணி யிருக்க மாட்டார்களே! "ருஷ்யாவா, அதென்ன ஐயா, வெறும் குடியானவ நாடு! நல்ல சட்டை துணிகளை எப்படி அணிவது என்பது கூடத் தெரியாதவர்க ளாச்சே அங்குள்ளவர்கள்" என்று, தான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அப்படித் தோற்றிக் கொண்டிருந்த ருஷ்யர்கள், இருபது வருடத் தயாரிப்போடும், நவீன ஆயுதங்களோடும், போராட வந்த ஜெர்மானியர்களை எப்படி எதிர்த்து நின்று, சமாளித்துக் கொண்டு, புறமுதுகு காட்டி ஓடவும் வைத்தார்கள்? அதன் ரகசிய மென்ன என்று கேட்கலாமல்லவா நீங்கள்?

ரஷ்யர் வெற்றியின் ரகசிய மென்ன?

தக்க சமயத்திலே உபயோகமாகக் கூடிய ரிஸர்வ் படைகளைப் பல இடங்களில் பத்திரமாகச் சேகரித்து வைத்திருக்கும் தந்திரம் ஒன்றை வெகு வெற்றிகரமாக உபயோகித்து விட்டார்கள் ருஷ்யர்கள். எதிரி பாய்ந்து பாய்ந்து தாக்குகிறான். அப்பொழு தெல்லாம் கூடிய வரை சமாளித்து நின்று, அவனது முன்னேற்றத்தைத் தடுக்கப் பார்ப்பது, எதிரியின் தாக்குதல் மிகக் கடுமையாக இருந்தால், கொஞ்சம் பின் வாங்குவது; சில முக்கியமான நகரங்கள், ஆலைகள் எல்லாம் தாரை வார்த்து போனாலும் பரவா யில்லை; ராணுவத்தினரை மட்டும் அதிகச் சேத மில்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்; எதிரியின் தாக்குதல் வேகம் எப்பொழுதும் ஒரே மும்முரமாக இருக்க முடியா தல்லவா? அது எப்பொழுதாவது வேகம் குறைந்து தோன்றக் கூடும்.

ஆகாசவாணம் ஏக தடபுடலாகத் தான் கீழே யிருந்து வானத்தில் பாய்ந்து செல்லுகிறது. அது, ஒரு கணக் கில்லாது மேலே மேலே போக முடியுமா என்ன? ஏதோ ஒரு சிறு தூரம் ?பானதும், அதில் உள்ள நெருப்பு அணைந்து வெறும் குழல் மட்டும், "தொப்"பென்று கீழே வந்து விழக் கூடும். அதுவும் யார் தலையிலாவது விழுந்தால் காய மேற்படக் கூடும். இல்லாவிட்டால், மேலே பாயும் வாணம், ஒரு உயரத்திற்குப் போனதும் "டபார்" என்று வெடித்துத் தீர்ந்துபோய் விடக் கூடு மல்லவா?

அதேபோல, ஜெர்மானியரது தாக்குதல் வேகம் ஒரு கட்டத்தில் குறைந்து தானே போக வேண்டும்? அந்தக் கட்டம் எப்பொழுது வருகிறது என்பதை ருஷ்யர்கள், தங்களது கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

சட்டென தங்களிடமுள்ள ரிஸர்வ் படைகளை முடுக்கி விட்டு விடுகிறார்கள். சடைவு ஏது மில்லாது சண்டை போடத் தினவு கொண்டுள்ள கைகளுடனிருக்கும் அந்தப் படையினர், தளர்ந்து நிற்கும் ஜெர்மானியரை, கதி கலங்க அடித்து விடுகிறார்கள்.

ஜெர்மானியர் மளமள வென ருஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவை நெருங்கி விட்டார்கள். லெனின்கிராட் நகரத்தைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். நாஸி விமானங்கள் ருஷ்யரின் கடும் எதிர்ப்பையும் கவனியாது மாஸ்கோ நகர் மீதே பறக்கின்றன. ருஷ்ய அரசாங்கம், நூற்றுக் கணக்கான மைல்களுக்குக் கிழக்கேயுள்ள, க்யூபிஷெப் என்ற நகரத்திற்குப் போய் விட்டது.

மாஸ்கோவை ஜெர்மானியர் பிடித்து விடுவதால், ருஷ்யாவையே ஜெயித்தது போலாகி விடாது என்பது வாஸ்தவம். ஆனால், மாஸ்கோ போய் விட்டால், ருஷ்ய மக்களின் மனம் அலைவு பெறக் கூடும் என்பதை யாரும் மறுக்கவே முடியாது.

சிறு தவறினால் தலைகீழாய் விழ நேரும்.

பார்த்தார்கள் சேனைத் தலைவர்கள். ஜெர்மானியரின் தாக்குதலைக் கவனிக்கலானார்கள். வரவர அதன் வேகம் குறைந்து கொண்டே வந்தது. வெற்றிப் பேய் யாரையும் சும்மா விடுவதில்லை. அது மனிதனை ஒரு கட்டத்திலே மதோன்மத்தனாக இருக்கச் செய்து விடுகிறது. பத்து மாடிகள் உள்ள கட்டிடத்திலே, பத்தாவது மாடியிலிருந்து தவறி விழுந்தால், பத்து மாடிகள் விழுந்தாக வேண்டும். அவ்வளவுக் கவ்வளவு ஆபத்து அதிகம். அதே போல, வெற்றி அதிகமாக ஆக, மனுஷன் தன்னை மறந்து விடுகிறான். ஆகவே அந்த நிலைமையில் ஒரு சிறு தவறு செய்தாலும், அவன் தலை குப்புற விழுந்து விடுகிறான். விழும் உயரம் ரொம்ப அதிகம். ஆதலால், அவன் உருப்படி யாவதே யில்லை.

இந்த உண்மைப்படி ஜெர்மானியர்களின் தாக்குதல் வேகம் உச்சத்தையடைந்து, பிறகு தணிந்து போன சமய மும், மாஸ்கோ நகருக்கு ஆபத்து ஏற்பட்ட சமயமும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டதால், ருஷ்யத் தலைவர்கள் தங்களிடமிருந்த ரிஸர்வ் படைகளை உபயோகித்துவிடத் தீர்மானித்தார்கள். அவர்கள் தீர்மானித்தது ரொம்ப சரியாகப் போயிற்று. தள்ளாடிப் போய் ஓய்வை நாடிக் கொண்டிருந்த ஜெர்மனியரால், புது வெள்ளம் போல் வந்த ரஷ்யர்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. எழுபதாயிரம் குதிரை வீரர்கள் மின்னலென வெள்ளிப் படுக்கை போல் கிடக்கும் பனிக்கட்டிகள் மீது பாய்ந்து விட்டார்கள். மாஸ்கோவிற்குத் தெற்கேயுள்ள ஜெர்மானியரே அவர்களது ஆயுதங்களுக்கு இலக்குகளானார்கள். வடபுறமோ, மோட்டார்ப் படை கிளம்பி விட்டது. அவ்ள வு தான்! அப்புறம் நடந்த கதை தான் தெரியுமே!

இன்று அதே மாஸ்கோ நகரிலே எல்லோரும் நிர்ப்பயமாக ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருக்கிறார்கள். சினிமா ஆட்டங்கள் தவறாது நடக்கின்றன. ருஷ்ய அரசாங்கமும் மாஸ்கோவிலேயே இருந்து வருகிறது. அதுமட்டுமா? அடிமேல் அடிவாங்கி இடிந்து கிடக்கும் ஜெர்மானியரை, மறுபடியும் தலைதூக்க வொட்டாது வீழ்த்த, அமெரிக்கா, பிரிட்டன், ருஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகளின் பிரதிநிதிகளும் அதே மாஸ்கோ நகரிலே இப்பொழுது கூடி, ஆனந்தமாகத் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யப் பெண்கள் வீரம்.

ருஷ்யாவின் ஜனத்தொகை இருபது கோடி. அதிலே அரைக்கால் பங்கு ஆட்கள் சண்டைபோடச் சித்தமாக இருக்கிறார்கள். ருஷ்யாவிலே உள்ள பெண்களுக்கு செய்யமுடியாத வேலை என்று ஒன்று கிடையாது. அவர்கள் இப்பொழுது செய்யாத வேலை எதுவுமே இல்லை, ருஷ்யப்படை, 1941-ம் ஞு ஜூன் மீ 22உயில் ருஷ்யா போருக்குக் கிளம்பிய போது எப்படி யிருந்ததோ, அப்படியே இருக்கிறதாம் இன்றும். அப்படியானால் ருஷ்யப்படையில் உள்ளவர்கள் சாகா வரம்பெற்றவர்களா? ருஷ்யப் போரரங்கத்தில் கணக்கின்றி மடிபவர்கள் எல்லாம் யார் என்று கேட்கிறீர்களா? ருஷ்யப் படையின் மொத்த சக்தியை குன்றாத சக்தியாக இருக்கச் செய்ய, ருஷ்யர்கள் சித்தமாக இருக்கிறார்கள்; மளமளவெனப் புது ஆட்கள் படையிலே வந்து தாமே சேருகிறார்கள். அதனால் தான் அதன் சக்தி குறைவதே இல்லை.

ருஷ்யர்களது அபார வெற்றிக்கு, தேசபக்தியிலேயே ஊறிய ருஷ்ய கொரில்லாக்களின் அற்புத வேலைகளும் காரணமாகும். போரரங்கத்திற்கு ஜெர்மானியர் பல குறுக்கு வழிகள் மூலமாக மேற்கொண்டு உதவியையும், ஆயுதங்களையும், உணவுப் பொருள்களையும் கொண்டு வந்த வண்ணமாக இருந்தார்கள். அந்தக் குறுக்கு வழிகளில் எல்லாம் கொரில்லாக்கள் பிரசன்னமானார்கள். மறைந்திருந்தே ஜெர்மானியரை மண்டையி லடித்தார்கள். இந்த வகையில் ஜெர்மானியர் அடைந்த நஷ்டம் அசாத்தியம், குறுக்குவழி வேண்டாம் என்று ராஜ பாட்டையில் சென்றாலோ, ரஷ்ய விமானிகள், கிடைத்தது கிடைத்தது என்று நொறுக்குகிறார்கள்.

இப்பொழுது, மெலிடபோல் என்ற முக்யமான தென் ரஷ்ய நகரை, ரஷ்யர்கள் பல நாள் போருக்கப்பால், கைப்பற்றி விட்டார்கள். அதோடு நின்று விடவில்லை சண்டை. மெலிடபோல் நகரைவிட்டு தூர தூரச் சென்று கொண்டிருக்கிறது யுத்தம். ஆகவே, மெலிடபோல் நகர் வாசிகளின் காதுகளிலே விழும் பீரங்கி வெடி சப்தங்கள் வரவரக் குறைந்து கொண்டே யிருக்கின்றன. மெலிடபோல் நகர்ப் போரில் மடிந்த ஜெர்மனியரது சவங்கள் பதினாயிரக் கணக்கிலிருக்கிறதாம். அவற்றை அப்புறப்படுத்துவது பெரிய வேலையாகவே இருக்கிறதாம்.

யூக்ரேனிலிருந்தே ஜெர்மானியரைக் கடைசியாக அடித்து விரட்டுவதற்கான போர்கள் நடந்து வருகின்றன. டினீப்பர் நதி வளைவிலே பெரியதொரு, சுமார் ஐம்பது டிவிஷன் கொண்ட ஜெர்மன் படை இருக்கிறது. அந்தப் பிரதேசத்திற்குச் செல்லும் ரயில்வே பாதையைத் துண்டிக்க ரஷ்யர்கள் எத்தனித்துக் கொண்டிருக்கிறார்களாம். அந்தப் பாதை மட்டும் துண்டிக்கப்படுமானால், அப்புறம் ஜெர்மானியர் மற்றொரு ஸ்டாலின்கிராட் 'கண்ணாலி' நாடகத்தில் சிக்கிக் கொள்ள நேரிடலாம். இதை அறிந்தே உதவிக்காக, ஜெர்மானியர் விமானங்களில் கொணர்ந்து தள்ளப்படுகிறார்களாம். நீபரோபெட்ரோப்ஸ்க் நகரை ரஷ்யர்கள் பிடித்து விட்டார்கள். இது ஜெர்மனியருக்குப் பேரிடிபோலிருக்கும்.

கியப் நகரத்திற்கு வடக்கே ரஷ்ய டாங்கிப் படைகளின் முன்னேற்றம் குறைந்திருக்கிறதாம். தென்புறம் மட்டும் ரஷ்யர்களின் கை உயர்ந்தே யிருக்கிறதாம். ஜெர்மானியரின் எதிர்ப்பு வெகுக் கடுமையாகவே இருக்கிறதாம். கடுமையாக இல்லாதிருக்குமா என்ன?

சாதாரணமாக போர் வீரர்களுக்கும் சாதாரண மனுஷர்கள் போலவே மழையைக் கண்டால் பிடிக்காது. ஆனால், ஹிட்லரும் அவரது ஆட்களும் தற்சமயம் வருண ஜெபம் செய்து கொண்டிருப்பார்கள் என்று சொன்னால், அது மிகைபடக் கூறுவது ஆகாது.

க்ரிமியாவில் ஜெர்மானியர் திண்டாட்டம்.

தெற்கே, க்ரிமியாவில் உள்ள ஜெர்மன் படையின் பாடு திண்டாட்டத்தில் வந்துமுடியும் போலிருக்கிறது. அங்குள்ள ஜெர்மானியர் காலி செய்யப்படுகிறார்கள் என்றொரு செய்தி கூறுகிறது. கொஞ்சம் யோசித்தே இச்செய்தியை நம்பவேண்டும் நாம்.

ஏனென்றால், கிரிமியாவை அவ்வளவு சுலபமாக ஜெர்மானியர் விட்டுவிட்டுப் போவார்களேயானால், கருங்கடல் பிரதேசம் முழுவதுமே ருஷ்யர்களின் ஆதிக்கத்தில் வந்துவிடுமே! அப்புறம் நேசதேசத்தவர்களுக்கு, பால்கன் பிரதேசத்தைத் தாக்குவது எளிதாகி விடுமல்லவா? அந்தச் சௌகரியத்தை ஹிட்லர் செய்து கொடுக்க விரும்புவாரா என்ன? கிரிமியா பிரதேசம் மறுபடியும் ஒரு படுகளமாக ஆகாது போகப் போகிறதா என்ன? ஜெர்மானிய பொது மக்களிடையே ஹிட்லர் மீது வரவரக் கசப்பு அதிகமாகிக் கொண்டிருக்கும் என்று தைரியமாக எதிர்பார்க்கலாம். ஜெர்மனியிலே, பல புது சேனாதிபதிகள் கிளம்பி யிருக்கிறார்களாம். அவர்களில் சிலர் தான், ஹிட்லரின் போர்த் திட்டத்தை ஆதரிக்கிறார்களாம். மற்றவர்கள், போருக்குப் புதுத் திட்டம் போட்டாக வேணு மென்கிறார்களாம். இப்படியாக, ராணுவத் தலைவர்களிடையே ஜெர்மனியில் பிளவு ஏற்பட்டிருக்கிறது என்று நிச்சயமாகத் தெரிகிறது.

கட்டளையிடும் ஹிட்லர் கெஞ்சுகிறார்.

நான்கு வருடங்களுக்கு முன் இவ்வாறு யாராவது ஹிட்லரை எதிர்த்து அபிப்பிராயம் கொடுக்கத் துணிந்திருப்பார்களா? அவ்வாறு அபிப்பிராயம் கொடுத்துவிட்டு, அவர்கள் தங்கள் அப்பாக்களுக்குப் பிள்ளைகளாகவோ, மனைவியருக்குப் புருஷர்களாகவோ இருந்திருப்பார்களா? அவர்களது தலைகள் மட்டும் பனங்காய் மாதிரி தரை மீது உருண்டிருக்காதா?

அவ்வாறு செய்திருக்கக்கூடிய ஹிட்லர், இன்று என்ன செய்கிறார் தெரியுமோ? தனது அபிப்பிராயத்திற்கு மாறு அபிப்பிராயம் கூறும் சேனாதிபதிகளிடம் கெஞ்சுகிறாராம். 'கொஞ்சம் பொறுத்துப் பாருங்களேன்!' என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறாராம். கொடுக் கிழந்த தேளை யார் மதிப்பார்கள்? கொஞ்ச நேரம் போனால் எடுத்து விளையாட மாட்டார்களா சிறுவர்களும்?

ஹிட்லருக்கு முன்பிருந்த மதிப்பெல்லாம் போயிருக்கும். அவரே கூடிய சீக்கிரம் போய்விடப் போகிறார் பாருங்கள்!

இத்தனைக்கும் மூல காரணம் வீர ருஷ்யர்கள் தான்! அவர்களை உலகம் என்றும் மறக்கவே மறக்காது. வீரத்திற்கு உதாரணம் கூறவேண்டுமானால், இனி எந்த கதாசிரியனும் சரி, நாடகாசிரியனும் சரி, கவியும் சரி ருஷ்யர்களின் பெயர்களையே உபயோகிப்பார்கள் என்று நினைக்கிறோம்.

* * * *

வெட்கம்! வெட்கம்!

இருபத்தோரு வருஷங்களுக்கு முன்பு முஸோலினி இத்தாலியில் ஒரு தகடுதத்த வேலை செய்தார். திடீரென்று பதவி மோகம் கொண்டு, சில முரட்டு ஆட்களைக் கையாட்களாகக் கொண்டு, பாஸிஸ்ட் கட்சி என்று அதற்குப் பெயர் கொடுத்துக் கொண்டு, ரோமாபுரியை நோக்கி கலாட்டா செய்யப் புறப்பட்டார். இத்தாலிய மன்னர் என்றுமே மகா சாது. மார்ஷல் படாக்ளியோவின் யோசனையைக் கூட ஒத்தி வைத்துவிட்டு, முஸோலினியை வரவேற்று, அவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்து விட்டார். முஸோலினி, தானே சர்வாதிகாரியானார். ரோமாபுரி மீது படையெடுத்து வந்த அந்தத் தினம், இந்த அக்டோபர் மாதத்தில் தான் வருகிறாப் போலிருக்கிறது. அதை வருடா வருடம் ஏக தடபுடலாக, முஸோலினியைச் சேர்ந்தவர்கள் கொண்டாடி வந்திருக்கிறார்கள். வேறு வழியில்லாது இத்தாலிய மக்களும் அந்த விழாக்களில் பங்கெடுத்து வந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் தான், சைத்தானின் கையாட்கள் போல் இருந்த கருஞ் சட்டைக்காரர்கள் அவஸ்தைப் படுத்துவார்களே!

இவ்வளவு காலமாக முஸோலினி, இந்த தினத்தைக் கொண்டாடியது போலவே, இந்த வருஷமும் தீபாவளி தினத்தன்று கொண்டாடுகிறாராம். இது இருபத்தோராவது வருஷக் கொண்டாட்டமாம்.

இந்தச் செய்தியைத் தினசரிகளில் வாசிக்கும்பொழுது, நமக்கே வெட்கமாயிருந்தது. முஸோலினிக்கு வெட்கமா யில்லை போலிருக்கிறது இது. மண்டி போட்டு மண்ணைக் கவ்விய நொண்டிக் குதிரை, ரேஸ் குதிரை அருகே போவதைப் பார்த்து ஒரு கனைப்புக் கனைத்ததாம். அம்மாதிரியிருக்கிறது முஸோலினி செய்யும் காரியம்.

ஏதோ ஜம்பமடித்துக் கொள்வதற்காக உபயோகமாக இருக்கட்டும் என்று ஹிட்லர் சிறைபட்டுக் கிடந்த முஸோலினியை சாமர்த்தியமாக தப்புவிக்கச் செய்தார். அப்புறம் முஸோலினிக்கு ஒரு பட்டமும் கொடுத்து ஆளாக வைத்திருக்கிறார். இந்த நிலைமையில் முஸோலினி ரோமாபுரிப் படை யெடுப்பிற்கு வருஷக் கொண்டாட்டம் கொண்டாடுகிறாராமே!

வெட்கங் கெட்ட மனுஷன்.

இன்று ரோமாபுரி மீது நேச தேசத்தவர்கள் படையெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். வால்டர்னோ நதி யருகே இருந்த ஜெர்மானியரை எல்லாம் விரட்டி யடித்துக் கொண்டு முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள் அவர்கள். எங்கே பின்னால் வந்து சூழ்ந்து கொண்டு விடப் போகிறார்களோ என்ற பீதியோடு, ஜெர்மன் படைத்தலைவரான மார்ஷல் கெஸல்ரிங் நாலாபுறமும் பார்த்துக்கொண்டே போரை நடத்திக் கொண்டிருக்கிறார். ரோமா புரியைத் திறந்து விட்டு விட போப்பாண்டவர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் என்கிறார்கள். ரோமாபுரியி லிருந்த நாஜிகள் வெளியேறிய வண்ணமா யிருக்கிறார்களாம். உண்மையில் ரோமாபுரி மீது படையெடுப்பது சம்பந்தமாகக் கொண்டாட்டம் நடத்த வேண்டியவர்கள், நேச தேசப் படைகள். அப்படி யிருக்க முஸோலினி ஒரு கொண்டாட்டம் கொண்டாட வந்துவிட்டாரே! வெட்கங் கெட்ட மனுஷன்!

எல் அலாமின் போர் ஆரம்பமாகி ஒரு வருடமாகிவிட்டது. அங்கிருந்தே வெற்றி மாலைகளை மேலும் மேலும் சூடியவண்ணமே முன்னேறிய பிரிட்டிஷ் எட்டாவது சேனை ரோமாபுரிக்குச் செல்லும் பாதையி லிருக்கிறது இப்பொழுது. இதைக் குறித்து அந்த சேனையைச் சேர்ந்தவர்கள், கிடைத்த நேரத்திலே ஒரு கொண்டாட்டம் நடத்தி யிருக்கிறார்கள். 'இந்த வாழ்க்கையிலே ஒரே ஒரு விஷயம் தான் நிச்சயம் என்றால், அது நேச தேசத்தாரின் வெற்றி தான்!' என்று ஜெனரல் மண்ட்காமரி கூறியிருக்கிறார். அதிலே சந்தேக மென்ன?

'இந்தப் போர் இன்னும் பல காலம் நீடித்து நடக்கும். பல சங்கடங்களும் நஷ்டங்களும் ஏற்படலாம். ஆனால் அயோக்கிய நாஜிகள் அழிவது திண்ணம். அவர்களது பிடியிலிருந்து ஐரோப்பா மீளுவதும் திண்ணம்' என்கிற தினுஸிலே சேனைத் தலைவர் ஐஸன்ஹோவர் துரை கூறியிருக்கிறார்.

ருஷ்ய விமானிகளும், அமெரிக்க பிரிட்டிஷ் விமானிகளும் பெர்லின், ஹாம்பர்க் போன்ற பெரிய தொழிற்சாலை நகரங்களை இடைவிடாது கவனிப்பதி லிருந்தே, ஜெர்மானியருக்கு மேற் கண்ட விஷயம் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டுமே!

யுத்தம் நடக்கிறது. இன்னும் நடக்கும். ஆனால் மாஸ்கோ மகாநாடு இந்த யுத்தத்தின் ஆயுட் காலத்தைக் குறுக்கிவிடும் என்று எல்லோரும் எதிர் பார்த்திருக்கிறார்கள். அவ்வாறே ஆகட்டும்! ஆமென்! ததாஸ்து!

இராணுவ மோட்டார் ஓட்டிகளுக்கு கட்டு திட்டங்களில்லையா?

இராணுவ மோட்டார் ஓட்டிகள் தம் வண்டிகளை மகா வேகமாக ஓட்டிக் கொண்டு போவதாக சமீபத்தில், கால்நடையாகத் தெருக்களில் செல்லுகிறவர்களும், மோட்டார்கார் சொந்தக்காரர்களும் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். போக்கு வரவு விதிகள் இந்த மோட்டார் ஓட்டிகளைக் கட்டுப்படுத்தாது என்னத் தக்க முறையில் அவர்கள் நடந்துகொள்ளுகிறார்களென்றும், ஆகவே, அந்த விதிகள் அவர்களைக் கட்டுப்படுத்துமா அல்லவா வென்று தமக்குச் சந்தேகம் உண்டாவதாகவும் தெரிவிக்கிறார்கள்.

பொது ஜனங்கள், போக்கு வரவு விதிகளுக்கு எப்படிக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமோ, அது போலவே, இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் கட்டாயம் கட்டுப்பட்டுத் தான் நடக்க வேண்டும். இந்த விதிகளை ஓட்டி நடந்து கொள்ள வேண்டுமென்று இராணுவ மோட்டார் ஓட்டிகளுக்குத் தெளிவாகக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. வெகு ஜாக்கிரதையாக மோட்டார் ஓட்ட வேண்டியதன் அவசியத்தைக் குறித்து, இராணுவ உத்தியோகஸ்தருக்கும் படையினருக்கும் வலியுறுத்தி ஒரு கட்டளை சமீபத்தில் அனுப்பப்பட்டது. மகா வேகமாகவோ, கவலையீனமாகவோ தம் வண்டிகளை ஓட்டியதாக மெய்ப்பிக்கப்படும் மோட்டாரோட்டிகளுக்குத் தகுந்தபடி தண்டனை விதிக்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றியும் ஏதேனும் விபத்து நேர்ந்து யாருக்காவது காயப்பட்டால், அவர்களுக்கு வைத்திய உதவி கிடைக்கத் தக்கபடி எல்லா வித நேர்மையான முறைகளையும் கையாள வேண்டுமென்றும், போலீசார் தன்னைப் பற்றி கேட்கும் எல்லாத் தகவல்களுக்கும் தகுந்த பதில் கூற வேண்டு மென்றும், அங்கே போலீசார் இல்லா விட்டால், தானே அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூடிய சீக்கிரம் போய், அச்சம்பவம் நிகழ்ந்த விவரங்களை அறிவிக்க வேண்டு மென்றும், அக்கட்டளையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பொது ஜனங்களுக்குள்ள கட்டு திட்டங்களை விட, இராணுவ மோட்டார் ஓட்டிகளுக்குக் கட்டு திட்டங்கள் மிகவும் கடுமையானவை. போக்கு வரவு விதிகளை மீறுகிறவர்களுக்குத் தண்டனையும் அதிகக் கடுமையானவை. பகலில் மோட்டார்கார்கள் ஓட்டுவதை விட, இரவில் ஓட்டுவதற்குள்ள விதிகள் மேலும் கடுமையானவை.

இந்த விதிகளை யொட்டி இராணுவ மோட்டார் ஓட்டிகள் நடந்து கொள்ள வேண்டு மென்பது பற்றி, இராணுவ அதிகாரிகள் மிகவும் ஆவலா யிருக்கிறார்கள். எந்த மோட்டார் ஓட்டியாவது விதிகளை மீறியதாக விருந்தால், அந்த வண்டியின் நம்பர், இடம், நேரம் முதலிய விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட சாட்சியங்கள் கிடைத்தவுடனேயே, அந்தந்த அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு, ஏற்ற, தண்டனை விதிப்பார்கள். இப்படிப்பட்ட பிரியாதுகளெல்லாம், "சப் ஏரியா ஹெட் குவார்ட்டர் பிரிகேடியர்" அவர்களுக்குச் செய்து கொள்ளப்பட வேண்டும்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

அக்டோபர் 20.—ஜெர்மனியின் மேற்குப் பகுதியிலுள்ள கேந்திர ஸ்தானங்களை அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

அக்டோபர் 21.—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸுடனும் மிஸ்டர் சர்ச்சிலுடனும் மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் விருந்துண்டார்.

அமெரிக்கப் படை யொன்று பிரிட்டனுக்கு வந்து இறங்கி யிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அக்டோபர் 22.—விமான அபாய அறிவிப்புச் சங்கு இன்று லண்டனில் ஊதியது. சில எதிரி விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து வந்து பல விடங்களில் தாக்கின.

அக்டோபர் 23.—சில எதிரி விமானங்கள் கென்ட், சஸ்ஸெக்ஸ், முதலிய பகுதிகளைக் கடந்து, ஹோம் கௌண்டி, கிழக்கு ஆங்கிலியா, லண்டன் வரை போய் பல வெடி குண்டுகளை எறிந்தன.

ஜெர்மனியிலுள்ள காசெல், ப்ராங்பர்ட் ஆகிய இடங்களை பிரிட்டிஷ் விமானப் படை வெகு கடுமையாகத் தாக்கியது.

கூட்டுப் போராட்டங்களின் தலைவராக லார்ட் லூயி மௌண்ட்பாட்டன் வகித்து வந்த பதவிக்கு, ப்ரிகேடியர் ஆர். இ. லேகாக் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அக்டோபர் 24.—"ஹிட்லருடைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான மாய முறை யொன்றைக் கைக் கொள்ளப்படும்" என்று வரையப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்கள், ஜெர்மனியில் பரப்பப் படுகின்றன. ஜெர்மனியின் உள் நாட்டின் ஊழலான நிலைமையை இது வெளிப்படுத்துகிறது.

அக்டோபர் 25.—"சாரிப்டிஸ்", "பிம்போர்ன்" என்னும் இரண்டு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் மூழ்கியதாக அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

அக்டோபர் 21.—விலைவாசிகள் நிர்வாகியான மிஸ்டர் ப்ரெனடிஸ் ப்ரௌன் தன் பதவியை ராஜிநாமா செய்து விட்டார்.

அக்டோபர் 22.—மிஸ்டர் ரூஸ்வெல்டுக்கு சற்று ஜல தோஷம்; எனவே படுக்கையி லிருக்கிறார்.

உலக சமாதானத்தைக் காப்பாற்றும் பொருட்டு யதேச்சை நாடுகளுடன் அமெரிக்காவும் சேரவேண்டு மென்று, அமெரிக்க அரசாங்க சபையங்கத்தினரான மிஸ்டர் டாம் கனலி கொண்டு வந்த தீர்மானம், செனெட் அந்நிய நாட்டு சம்பந்தக் கமிட்டியில் நிறைவேறியது.

அமெரிக்க நிதி மந்திரி மிஸ்டர் ஹென்ரி மார்கந்தா மால்டா வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 23.—மிஸ்டர் ரூஸ்வெல்டுக்கு 'இன்புளூவென்சா' காய்ச்சல் கண்டு படுக்கையில் இருக்கிறார்.

அக்டோபர் 24.—சென்ற செப்டெம்பர் மாதத்தோடு முடிவாகிற 21 மாதங்களில், 1,10,000 விமானங்கள் கட்டி முடித்திருப்பதாகவும் இனி 5 நிமிஷங்களுக்கு ஒரு விமானம் விகிதம் கட்டப்படக் கூடுமென்றும் அமெரிக்க யுத்தப் பொருள்கள் உற்பத்தி போர்டு உப தலைவர் மிஸ்டர் சார்லஸ் வில்சன் கூறினார்.

அக்டோபர் 24.—மான்டினீரோவை நேச தேசப் படைகள் கைப்பற்றின.

அக்டோபர் 25.—ஸ்பாரனைஸ் என்னுமிடத்தை 5-ம் படை கைப்பற்றியது.

இந்தியா, பர்மா, இலங்கை.

அக்டோபர் 20.—இன்று காலையில் மேன்மை தங்கிய வேவல் பிரபு வைசிராயாக ராஜ விசுவாசப் பிரமாணம் செய்தார்.

மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபு இந்தியாவை விட்டுப் புறப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

சிட்டகாங்கைத் தாக்க ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் முயற்சித்தன.

இந்தியாவில் ஒரு ஹைகமிஷனரை நியமிப்பதென்று ஆஸ்திரேலிய மந்திரி சபை தீர்மானித்திருக்கிறது.

அக்டோபர் 22.—மியிதாவிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களை 60,000 பவுண்ட் பலமான வெடி மருந்துகளைக் கொண்டு தாக்கியதாக விமான மந்திரி அறிக்கை கூறுகிறது.

யுத்தத்திற்குப் பிறகு கைத்தொழில்கள் எந்த முறையில் அமைக்கப்பட வேண்டு மென்பது பற்றிய கொள்கையை வகுப்பதற்கென்று ஏற்பட்ட கமிட்டி, வியாபார அங்கத்தினரான கனம் சர் அசீசுல் ஹக் தலைமையில் புது டில்லியில் கூடியது.

அக்டோபர் 23.—மெய்க்திலா, ஹிஹோ, திடா, அக்யாப், கலிமியோ முதலிய இடங்களிலுள்ள ஜப்பானிய விமான தளங்களையும் கேந்திர ஸ்தானங்களையும் நேசநாட்டு விமானங்கள் தாக்கின.

மேன்மை தங்கிய லூயி மௌண்ட்பாட்டன் புது டில்லிக்குத் திருமபி வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 26.—கல்கத்தாவிலுள்ள அநாதைகள் விடுதிகளை, மாறு வேடத்தோடு மேன்மை தங்கிய வைசிராய் பார்வை யிட்டார்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்.

அக்டோபர் 20.—பிக்னடோரோ, ரக்கரோமன்ஸ், ட்ரகோனி ஆகிய இடங்களை நேச தேசப் படைகள் கைப்பற்றின.

அக்டோபர் 21.—பஸ்ஸோ, ஓராடினோ என்னுமிடங்களை நேசதேசப் படைகள் கைப்பற்றின.

ரோட்சிலுள்ள மரிட்ஸா, மெலாஸ், சைமாஸ், கோஸ் என்னு மிடங்களை நேசதேச வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

அக்டோபர் 22.—பரளெல்லோ, பீடிமான்டி, அலைப் ஆகிய இடங்களை நேசதேசத் துருப்புக்கள் கைப்பற்றின.

அக்டோபர் 23.—லுபெரோ என்னு மிடத்தை 8-ம் படை கைப்பற்றியது. ரோமாபுரியை நோக்கி 8-ம் படையும் 5-ம் படையும் 5 மைல் தூரம் முன்னேறின.

முசோலினியின் பாசிஸ்ட் வாலின்டியர் படைத் தலைவரான லெப்டினெனன்ட் ஜெனரல் ரென்ட்டேரரிக்கியை, பாசிஸ்ட் எதிர்ப்புக் கட்சியைச் சேர்ந்த மிலான் நகரத்திய மாணவ னொருவன் துப்பாக்கியால் சுட்டான்.

முசோலினியின் குடியரசு பாசிஸ்ட் அரசாங்கத்தின் கப்பற் படை மந்திரியான அட்மிரல் அன்டோணியோ லெக்னுனி என்பவரை, இத்தாலிய கப்பற் படை உத்தியோகஸ்தர்கள் கொன்று விட்டனர்.

அக்டோபர் 26.—பயானோ, ஸ்பைனேடா, படெல்லா, பலோட்டா, ப்ராங்கோலைஸ், ராவிஸ்கரனினு, ராக்செட்டா என்னும் இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

அக்டோபர் 20.—கியப் நகர்ப்புரங்களை செம்படையினர் அடைந்து விட்டனர்.

க்ரிமியாவிலிருந்து ஏராளமான ஜெர்மானியர்கள் காலியாகின்றார்கள்.

மெலிடபோலில் கடுமையான யுத்தம் நடக்கிறது.

மூவரசு மகா நாட்டில் இராணுவப் பிரச்சினை பற்றிய விவாதம் நடைபெற்றது.

மிஸ்டர் ஈடனை தோழர் ஸ்டாலின் வரவேற்றார்.

அக்டோபர் 22.—டினீப்ரோபெட்ரேப்ஸ்க் முழுதும் சூழப்பட்டு விட்டது.

முக்கியமான சுரங்கப் பகுதியான க்ரிவாய் ராக்குக்கு 20 மைல் தூரத்தில் தான் சோவியத் படைகள் இருக்கின்றன.

அக்டோபர் 23.—மெட்ரொபோல் பிடிபட்டது.

அக்டோபர் 24.—ஓர்ஷாவின் பல பகுதிகளில் சோவியத் படைகள் புகுந்து சென்றன.

உக்ரேன் மீட்சிப் போராட்டம் முடியுந் தருவாயி லிருக்கிறது.

அக்டோபர் 25.—டினிப்ரோபெட்ரோப்ஸ்கும், டினீப்ரோப்ரிஹென்ஸ்கும், கமென்ஸ்கோயி என்னும் இடமும் ரஷயர் வசமாயின.

தோழர் ஸ்டாலின், மிஸ்டர் ஹல்லுக்கு பேட்டி கொடுத்தார்.

மூவரசு மகாநாட்டின் நிபுணர்கள் கூட்டம் ஆரம்பமானது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

அக்டோபர் 22.—ஜெர்மன் தொழில் இலாக்காத் தலைவரோடு லவால் ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி 1943-ம் வருஷம் மேற்கொண்டு பிராஞ்சுக்காரர்களை வேலைக்கு ஜெர்மனிக்கு அனுப்ப வேண்டியதில்லை.

அக்டோபர் 20.—நோவோ ஓரோஸ், பிலேஸ் ஆகிய இடங்களை யுகோஸ்லாவ் நாட்டுப் பற்றுடைய வீரர்கள் கைப்பற்றினர்.

நடு நிலைமை நாடுகள்.

அக்டோபர் 21.—சிரியாவின் முதன் மந்திரியையும் அந்நிய நாட்டு மந்திரியையுங் கொண்ட தூதுகோஷ்டி, கெய்ரோ வந்து சேர்ந்தது.

அக்டோபர் 22.—சுவித்சர்லாந்தில், டென்ஸன், க்ரிசன்ஸ் ஜில்லாக்களுக்கு மேலே ஒரு அந்நிய நாட்டு விமானம்—அடையாளம் கண்டு கொள்ள முடியாதது—பறந்ததனால், அந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் விமான அபாய அறிவிப்புச் சங்கு ஊதியது. பல விடங்களில் நெருப்புக் கங்குகள் எறியப்பட்டன.

அக்டோபர் 23.—இங்கிலாந்திலிருந்து ஸ்டாக்ஹோமுக்குக் போய்க் கொண்டிருந்த ஒரு போக்கு வரவு விமானத்தை ஸ்வீடன் கரைக்கு அப்பால் சுட்டு வீழ்த்தி விட்டார்கள். அதனால் 13 பேர்கள் உயிரிழந்தனர்.

தூரக் கிழக்கு நாடுகள்.

அக்டோபர் 20.—ரபாலைத் தாக்கியதில் 60 ஜப்பான் விமானங்கள் நாசமாயின.

அக்டோபர் 21.—பின்ஸ்சேபனைக் கைப்பற்ற வேண்டி, ஜப்பானியர்கள் எதிர்த்துத் தாக்கி ஓரளவிற்கு முன்னேறி யிருக்கின்றார்கள்.

தெற்கு யோகஸ்வில்லாவில் 55 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

போடீன் என்னும் பகுதியை சீனர்கள் கைப்பற்றி, ஷியுடுங்சென் என்னும் ஜப்பானியர்கள் குடியேறி யிருந்த பட்டணத்தைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள்.

மேன்மை தங்கிய லார்டு லூயி மௌண்ட்பாட்டன் சூங்கிங்கில் ஜெனரலாசிமோ ஷியாங் கெய் ஷேக்கைக் கண்டார். 5 நாட்கள் அங்கே தங்கி யிருந்த பிறகு, இன்று அவர் சூங்கிங்கிலிருந்து புறப்பட்டார்.

அக்டோபர் 22.—சென்ற 3 நாட்களாக, பின்ஸ்சேபனில் எதிரிகள் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

மிஸியா தீவிலுள்ள கலுலு என்னும் எதிரி ஸ்தபானங்கள் தாக்கப்பட்டன.

அக்டோபர் 24.—செலிபிஸ் தீவு தாக்கப்பட்டது. கலிகா முழுதும் நேச நாட்டினர் கைப்பற்றினர்.

பிரிட்டிஷ் இராணுவ 'மிஷன்' சிட்னி வந்து சேர்ந்தது.

அக்டோபர் 25.—பின்ஸ்சேபனைச் சுற்றி எதிர்த்துத் தாக்கிய ஜப்பானியப் படை விரட்டப்பட்டது.

வேவாக்கில் 20 எதிரி விமானங்கள் நாசமாயின.

நியூ பிரிட்டனுக்கு அப்பால் ஜப்பானிய தளவாடக் கப்பல் அழிக்கப்பட்டது.

ஜப்பானிய அரசாங்க சபையின் முக்கியமான தோர் கூட்டம் நடந்தது.

ரூ. 5,000 ரூ. 1,000

பரிசுகள்

எதிரி உளவாளிகள் யார் ?

எதிரிக்கு உதவி செய்கிறவர்கள் யார் ?

பிடித்துக் கொடுத்தால் ரூ. 5,000 வரை பரிசு

அவர்களைக் கைது செய்யத் தக்க தகவல் கொடுப்பவர்களுக்கு

ரூ. 1,000 வரை பரிசளிக்கப்படும்

● 1. சந்தேகத்திற் கிடமான கப்பல் நடமாட்டங்கள்; குறிப்பாக, கடலோரங்களில் நடமாட்டங்கள்,

● 2. அந்நியர்கள் இராணுவ உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும், அல்லது அவையின்றியும், கூட்டமாகவோ, தனித் தனியாகவோ காணப்பட்டால்,

● 3. நேச நாட்டு விமானங்கள் அல்லாதவை தரையிலோ ஆகாயத்திலோ காணப்பட்டால்,

● 4. அவற்றிலிருந்து விமானக் குடைகளின் உதவியால் யாராவது இறங்கினாலும், எதையாவது இறக்கினாலும்,

● 5. தரையிலோ, கடலிலோ, ஆகாயத்திலோ எதிரி நடமாட்டம் பற்றிய குறிப்புக்கள் ஆகிய தகவல்களைக் கொண்டு எதிரிகளின் உளவாளிகள் கைது செய்யப்பட்டால்,

இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்

உளவாளிகள் கிடைத்தாலும் அல்லது தகவல் கிடைத்தாலும் கிராமப் பெரியதனக்காரருக்காவது போலீசாருக்காவது கூடிய சீக்கிரம் தெரிவிக்க வேண்டும்; அல்லது கைது செய்யப் பட்டால், அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பரிசுத் தொகை பெற விரும்புவோர் அது சம்பந்தமான முழு விவரங்களும், சாட்சிகளின் பெயர்கள், விலாசங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றுடன் ஜில்லா கலெக்டருக்காவது ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்காவது அனுப்ப வேண்டும்.

இந்தப் பரிசுகள் சாதாரணமாக படை உத்தியோகஸ்தர்களுக்கும், சிவில் இலாக்காக்களிலுள்ள கெஜெட் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்படமாட்டா. ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியா அரசாங்கத்தின் அனுமதி பெற்று அவர்களுக்கும் வழங்கப்படும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.